Annual Subscription Rs.100/-

# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்
மலர் – 37 இதழ் – 11 நவம்பர் – 2024

தனிப்பிரதி
ரூ.10/-



## திருவள்ளூர் மாவட்டம், ஊத்துக்கோட்டையில் நடந்த இலவச பொது மருத்துவ முகாமின் போது...









## ஆசானின் அறிவுரையிலே ...


1. நிறுவன ஆசிரியர் உரை 3
2. சபை கூடி வருதல் 11
3. பெண்கள் பகுதி 14
4. வாலிபர் பகுதி 16
5. சிறுவர் பகுதி 19
6. ஜனங்கள் விருப்பத்துடன்... 21
7. கண்களைத் திறந்தருளும்... 25
8. எபிரெயர் 1ஆம் அதிகாரம்... 28
9. வேதாகமம் – தேவனின்... 32

# THIRUMARAI AASAAN

S. Rajanayagam
Editor
86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.
PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385
Pleading for the restoration of pure New Testament Christianity
Vol. 37 November - 2024 Issue - 11


ஆசிரியர் உரை

## சிலுவை பவுலின் மேன்மை

மேன்மை என்பது ஒரு மேன்மைதங்கிய வார்த்தை. ஒருவர் நிகழ்த்தியிருக்கும் சாதனை பற்றியோ அல்லது கொண்டிருக்கும் திராணி பற்றியோ அல்லது பெற்றிருக்கும் ஓர் உயர்வு பற்றியோ அல்லது அடைந்திருக்கும் ஒரு சிறப்பு நிலை பற்றியோ அல்லது ஏற்றிருக்கும் ஒரு நம்பிக்கை பற்றியோ உண்டாகும் மிஞ்சுதலான பெருமையுணர்வு தான் மேன்மை. இது படிப்பு, பதவி, பட்டம், பணம், அழகு, மொழி, இனம், தேசம் இன்னும் பக்திச் செயல்பாடு என்று எதைச் சார்ந்ததாகவும் இருக்க முடியும். பொதுவாக இப்படிப்பட்ட பெருமையுணர்வைப் பெற்றிருப்பவர்கள் தங்களுக்கு மேன்மையாக இருப்பது பற்றி சிலாகித்துப் பேசுவார்கள் அல்லது பேசிக்கொண்டே இருப்பார்கள்.

இப்பொருளினடிப்படையில் தான் பவுலடியார் தனக்குப் பெருமையுணர்வை ஏற்படுத்தும் மேன்மை எது என்று விளம்பியிருக்கிறார். **நானோ நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சிலுவையைக் குறித்தேயல்லாமல் வேறொன்றையுங் குறித்து மேன்மை பாராட்டாதிருப்பேனாக; அவரால் உலகம் எனக்குச் சிலுவையிலறையுண்டிருக்கிறது, நானும் உலகத்திற்குச் சிலுவையிலறையுண்டிருக்கிறேன்** என்று (கலா.6:14). இதே பவுலடியார், கொரிந்தியருக்கு எழுதும்போது, **நாங்களோ சிலுவையிலறையப்பட்ட கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறோம்; அவர் யூதருக்கு இடறலாயும் கிரேக்கருக்குப் பைத்தியமாயும்**

**இருக்கிறார்** என்று கூறுகிறார் (*I* கொரி.1:23). இவ்வசனங்கள் கிறிஸ்துவின் சிலுவை பவுலுக்குப் பேச்சாக மாத்திரமல்லாமல் மூச்சாகவும் இருந்துள்ளதென்று காட்டுகிறது.

சிலுவை என்பது நெடுக்கும், குறுக்குமான மரக் கட்டை களால் அல்லது மரச் சட்டங்களால் உண்டாக்கப்படும் ஒன்று. இயேசு ஆண்டவர் தற்காலிகமாக இப்பூமியில் வாழ்ந்த போது ஆட்சிக் கட்டிலில் இருந்த ரோமானியர்களால் கூட்டல் குறி போன்ற சிலுவை கடுங்குற்றவாளிகளின் தண்டனைக்காகவும், அப்படி விதிக்கப்படும் தண்டனையின் நிறைவேற்றத்துக்காகவும் பயன்படுத்தப்பட்டது. ஒருவேளை இவ்வகை மரணத்தை ரோமர்கள் தீவிரமாக நடைமுறைப்படுத்தியிருந்தாலும், இதை ஆரம்பித்தவர்கள் பெனிக்கேயர்கள். ஆம், அவர்களின் காலத்தில் (T) என்ற ஆங்கில எழுத்துப் போன்று சிலுவை வடிவம் பெற்றிருந்தது. பின்னாளில், பெருக்கல் குறி (X) போன்று உரு மாறி, ரோமர்கள் காலத்தில் கூட்டல் குறிபோல் (+) ஆக்கப்பட்டது. தரம் தாழ்ந்த குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்களுக்குத் தான் இத்தண்டனை கொடுக்கப்பட்டது. பெரும்பாலும், அந்நாட்களில் இழி பிறவிகளாகக் கருதப்பட்ட அடிமைகள் தான் இவ்வகை தண்டனை பெற்றார்கள்.விதிவிலக்காக ஒரு சில ரோமக் குடிமக்களுக்கும் கிடைத்துள்ளது.

இத்தண்டனை பெற்ற குற்றவாளிகள் சிலுவை மரத்துக்குக் கொண்டு செல்லப்படுவதற்கு முன்பாகக் கொடுமையான முறையில் சவுக்கால் அடிக்கப்படுவார்கள். இச்சவுக்கடியின் நோக்கம் குற்றவாளி சிலுவையில் சீக்கிரம் மரிக்கும்படியாக அவன் சரீரத்தைப் பெலவீனப்படுத்துவது. இப்படி பெலவீனப்படுத்தப்பட்ட சரீரத்தில் சிலுவை மரத்தைக் குற்றவாளி தூக்கிக் கொண்டு, பட்டணத்துக்குப் புறம்பே இருக்கும் தண்டனை நிறைவேற்றத்துக்கான இடத்திற்குச் செல்ல வேண்டும். ஒரு குற்றவாளி இப்படிச் சிலுவையைச் சுமந்து கொண்டு தட்டுத் தடுமாறி, விழுந்து எழுந்து நடந்து செல்லும்போது, இவன் செய்த குற்றம் என்ன என்று ஊரும், உலகமும் அறிந்து கொள்ளும்படியாக, **இவன் செய்த குற்றம் இது தான்** என்று எழுதப்பட்ட பதாகையை ஒருவன் ஏந்திப் பிடித்துக்கொண்டு ஒய்யாரமாக அவனுக்கு முன்பாக நடந்து செல்வான்.

பிறகு, குறிப்பிட்ட இடம் வந்தவுடன், சிலுவை கீழே கிடத்தப்பட்டு, குற்றவாளி அதன் மீது ஆடைகள் களையப்பட்ட நிலையில் மல்லாக்காகப் படுக்க வைக்கப்பட்டு, கை கால்கள்

சிலுவை மரத்தோடு கட்டப்பட்ட நிலையிலோ அல்லது ஆணிகள் கடாவப்பட்ட நிலையிலோ, குற்றவாளி கதறக் கதற அப்படியே அலாக்காகத் தூக்கி நிறுத்தப்பட்டு, ஒட்டுமொத்த சரீரமும் மூன்று புள்ளிகளில் தொங்கும்படியான நிலையில் விடப்பட்டு, வேதனை தாங்கமுடியாமல் துடிப்பது வேடிக்கை பார்க்கப்படும். பிறகு, உயிர் போனதை உறுதி செய்யும்படி கால் எலும்புகள் முறிக்கப்படும். இன்னும் சில சந்தர்ப்பங்களில் விலாவில் குத்தப்படும். இயேசு ஆண்டவருக்கு கால் எலும்புகள் முறிக்கப் படாமல் விலாவிலே தான் குத்தப்பட்டது [யோவான் 19;32-35].

இப்படி சாபத்தின் சின்னமாகக் கருதப்பட்ட மரத்தையும், [உபா.21:22,23; கலா.3:13] அவமானத்தின் அடையாளமாகப் பார்க்கப்பட்ட மரத்திலான சிலுவையையும் இயேசு வெற்றியின் சின்னமாக மாற்றினார் [கொலோ.2:13,15]. ஆம், அப்பாரச் சிலுவையில் சிந்தின இரத்தம் தான், **சகல பாவங்களையும் நீக்கி நம்மைச் சுத்திகரிக்கும்** வல்லமை கொண்டதாக இருக்கிறது [I பேதுரு 1:18,19; I யோவான் 1:7].

இந்தச் சிலுவையின் நற்செய்தியைப் பவுலடியார் கலாத்தியருக்கு எடுத்து விளக்கினபோது, பழைய ஏற்பாட்டின் படியான கிரியைகளை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு தங்கள் பக்தி வாழ்க்கையை நடத்திக் கொண்டிருந்த கலாத்தியர்கள், விசுவாச நிலைக்குத் தங்களை உட்படுத்தி, பக்தி ரீதியாகப் புதிய பார்வை பெற்று, பரத்தை நோக்கிப் பழுதில்லாமல் பயணிக்கத் தொடங்கினர். சும்மா இருப்பானா சாத்தான்? யூத மதப் போதகர்களை உசுப்பி விட்டு, அவர்கள் வழியாகப் பவுலடியாரின் அப்போஸ்தல அதிகாரம் பற்றிய சந்தேகத்தைக் கிளப்பி [காலா. 1:11; 2:14], விருத்தசேதன உடன்படிக்கையை எக்காரணம் கொண்டும் மீறக்கூடாது என்று எடுத்துரைக்கவும், எச்சரிக்கவும் செய்தான் [5:2,11;6:12]. இதன் மூலம், கலாத்தியா நாட்டு சபையாருக்கு மத்தியில் மோசே பிரமாணத்தின் கை ஓங்கி, கிறிஸ்துவின் பிரமாணம் தாழ்ந்து காணப்பட்டது. இச்செய்தி கேட்டுப் பதறிப்போன **சிலுவைப் பித்தனாகிய பவுல்**, மனபாரத்தோடும், வேதனையோடும் இந்நிருபத்தை வடித்திருக்கிறார். விசுவாசத்தினாலே நீதிமானாக்கப்படுதலும், கிறிஸ்துவின் சிலுவை சொல்லும் சுவிசேஷத்தினாலே சுயாதீனமடைவதுமே மேன்மையானது. ஆகவே, அடிமைப்படுத்தும் பிரமாணம் ஆகாது, ஒதுக்கித் தள்ளித் தூக்கி எறியுங்கள் என்று வலியுறுத்துகிறார்.

இப்படிப்பட்ட நூலின் இறுதியில் தான், **மாம்சத்தின்படி நல்வேஷமாய்க் காணப்பட விரும்புகிறவர்கள் எவர்களோ,**

**அவர்கள் தாங்கள் கிறிஸ்துவினுடைய சிலுவையினிமித்தம் துன்பப்படாதபடிக்கே உங்களை விருத்தசேதனம் பண்ணிக் கொள்ளக் கட்டாயம் பண்ணுகிறார்கள். விருத்தசேதனம் அடைந்திருக்கிற அவர்களும் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ளாமலிருக்கிறார்கள்; அப்படியிருந்தும், அவர்கள் உங்கள் மாம்சத்தைக் குறித்து மேன்மைபாராட்டும்படிக்கு நீங்கள் விருத்தசேதனம் பண்ணிக்கொள்ள வேண்டுமென்று விரும்பு கிறார்கள். நானோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சிலுவையைக் குறித்தேயல்லாமல் வேறொன்றையும் குறித்து மேன்மை பாராட்டாதிருப்பேனாக; அவரால் உலகம் எனக்குச் சிலுவையிலறையுண்டிருக்கிறது. நானும் உலகத்திற்குச் சிலுவையிலறையுண்டிருக்கிறேன்** என்கிறார் (கலா.6:12-14).

சரி, பவுலடியார் சிலுவையை மேன்மையாகக் கருதியதற்கு அவர் மனதில் ஏராளமான காரணங்கள் இருந்திருக்கலாம். அவைகளை நம்மால் பட்டியலிட முடியாது. ஆயினும் அவைகளில் ஒரு மூன்றை நாம் தெரிந்து கொண்டு, அவைகள் உலகத்துக்கும், நமக்கும் உரக்கச் சொல்லும் பாடங்கள் என்னவென்று கவனிப்போம்.

## I. சிலுவை என் வாழ்க்கை அர்த்தமற்ற ஒன்று என்று சொல்லுவதில்லை

சிலுவைப் பித்தனாகிய பவுலடியாருக்குச் சிலுவை மேன்மையாக இருந்ததிலிருந்து நம்மால் கற்றுக்கொள்ள முடிகின்ற முதல் பாடம், இப்பூமியில் மனிதனின் வாழ்க்கை அர்த்தமுள்ள ஒன்று என்பது.

ஆதியிலே தேவன் மனிதனைப் படைத்தபோது, அவனைத் தமது சாயலாகவும், தமது ரூபத்தின்படியும் படைத்தார் (ஆதி.1:26,27). அப்படிப் படைத்தவர், ஓர் ஆணோடும், ஒரு பெண்ணோடும் மாத்திரம் நிறுத்திக் கொண்டு, இயற்கைச் சட்டத்தின்படி அவர்கள் பலுகிப் பெருக அனுமதித்ததற்கான காரணத்தை மல்கியா தீர்க்கன் இவ்விதம் கூறுகிறார். **அவர் ஒருவனையல்லவா படைத்தார்? ஆவி அவரிடத்தில் பரி பூரணமாயிருந்ததே, பின்னை ஏன் ஒருவனைப் படைத்தார்? தேவபக்தியுள்ள சந்ததியைப் பெறும்படிதானே** என்று (மல்.2:15). ஆம், தம்முடைய சாயலில் படைக்கப்பட்ட மனிதன் எப்பொழுதும் தேவ பக்தியுள்ளவனாக இருக்க வேண்டுமென்பதே அவர் விருப்பம். ஆனால், செம்மையாகப் படைக்கப்பட்ட மனிதனோ பலவிதமான உபாயத் தந்திரங்களைத் தேடிக்கொண்டான் (பிர.7:29) விளைவு? தேவனிடமிருந்து பிரிந்துபோனான் ( ஏசாயா 59:1,2).

மனிதன் தன்னுடைய பாவச்செயல் காரணமாகத் தேவனிடமிருந்து பிரிந்துபோயிருந்தாலும், தேவனுடைய பார்வையிலிருந்து அவன் விலகிவிட முடியவில்லை. தேவன் அவன் மீது சிந்தை கொண்டவராகவே இருந்தார். ஏனெனில், அவன் நித்தியத் தன்மையோடு படைக்கப்பட்டிருந்தான். அப்படிப்பட்ட மனிதன் நித்திய காலத்திற்கும் ஆக்கினையை அடைவது அவருடைய விருப்பமல்ல. **தங்களுடைய ஆதிமேன்மையைக் காத்துக் கொள்ளாமல், தங்களுக்குரிய வாசஸ்தலத்தை விட்டுவிட்ட தூதர்களை மகாநாளின் நியாயத்தீர்ப்புக்கென்று நித்திய சங்கிலிகளினாலே கட்டி அந்தகாரத்தில் அடைத்து வைத்திருக்கிற தேவன்** (யூதா.6), மனிதன் காரியத்தில் மென்மை காட்டி, அவனைத் தம்மிடமாகச் சேர்க்கும்படியான ஒரு மீட்பின் திட்டத்தை உண்டு பண்ணினார். அது எப்படி என்று ஆச்சரியப்பட்டு தேவ தூதரும்அம்மீட்பின் திட்டத்தை உற்றுப் பார்க்க ஆசையாயிருந்தார்கள் (I பேதுரு1:12).

அப்படிப்பட்ட மீட்பின் திட்டத்தைத் தமது ஒரே பேறான குமாரனைக் கொண்டு செய்து முடித்தார். யோவான்3:16-ல் நாம் அதை வாசிக்க முடியும். **தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு அவரைத்தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்** என்று. அந்தத் தேவக் குமாரன் தன்னைச் சிலுவைக்கு ஒப்புக்கொடுத்து இரட்சிப்பை மனுக்குலத்துக்குச் சாத்தியமாக்கினார் ( எபேசியர்5:2)

அன்பானவர்களே! இவைகளெல்லாம் நமக்கு என்ன சொல்லுகிறது? ஆம், இப்பூமியில் மானிடம் காணும் பிறவி அர்த்த மற்ற ஒன்றல்ல. வெந்ததைத் தின்று விதி வந்தால் செத்துமடியும் ஒரு வாழ்வல்ல. மனிதன் மரித்து மண்ணுக்குள் போனாலும் அவன் விண்ணுக்கானவன். விண் வாழ்க்கை ஒருவனுக்குச் சொந்தமாக வேண்டுமானால், பவுலடியார் போன்று கிறிஸ்துவின் சிலுவையை மேன்மையாக எண்ணவேண்டும். அப்படி மேன்மையாகக் கருதுவதற்கு, சிலுவையைப் பற்றிய அறிவும், கிறிஸ்துவின் சிலுவை தரும் செய்தி பற்றிய புரிதலும் அவசியம்.

இந்த உண்மையைப் பவுலடியார் புரிந்துகொண்டபடியால் தான், **கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம்** என்று சொல்ல முடிந்தது (பிலி.1:21). ஆக, ஆன்மீக நிலையில் நாம் கேட்பாரற்றவர்களல்ல என்பதையும், தேவன் நம்மேல் கண்ணோக்கமாயிருக்கிறார் என்பதையும் புரிந்து கொண்டு, பவுலடியார் போல், சிலுவையை மேன்மையாகக் கருதி, மறுமையின் வாழ்வுக்கு நம்மை ஆயத்தமாக்கிடுவோம்.

## II. சிலுவை என்தோல்விகளுக்கு விமோசனம் இல்லையென்று சொல்லுவதில்லை

சிலுவைப் பித்தனாகிய பவுலடியாருக்குச் சிலுவை மேன்மை யாக இருந்ததிலிருந்து நம்மால் கற்றுக்கொள்ள முடிகின்ற இரண்டாம் பாடம், மனிதனின் பாவவாழ்வுக்கு விமோசனம் உண்டு என்பது.

மனிதனைப் பாடாய்ப்படுத்தும் பிரச்சினைகளில் தலையாயது பாவ தோல்விதான். மனிதனின் வேறெந்த தோல்வியும், அது எவ்வளவு அளவிட முடியாததாக இருந்தாலும் இம்மண்ணோடு முடிந்து போகும். மண்ணையும், விண்ணையும் ஒரு சேரச் சேதப் படுத்தும் அதிகாரம் பாவத்தைத் தவிர வேறெதற்கும் இல்லை. ஆகவே, தான் **பாவத்தின் சம்பளம் மரணம்** என்று பார்க்கிறோம் [ரோமர்6:23]. ஒருவேளை, நிலைமை இப்படியிருந்தாலும் மனிதன் நம்பிக்கையிழந்து விடவேண்டிய அவசியமில்லை. ஏனெனில், இயேசு ஆண்டவர் இப்பூமிக்கு அனுப்பப்பட்டதின் நோக்கத்தை லூக்கா ஆசிரியர் இங்ஙனம் கூறுகிறார். **இழந்து போனதைத் தேடவும் இரட்சிக்கவுமே மனுஷகுமாரன் வந்திருக்கிறார்** என்று [லூக்கா19:10]. இதே உண்மையை யோவான் ஆசிரியர் **இதோ உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி** என்று வெளிப்படுத்தினார் [யோவான் 1:29].

ஆக, இங்கே நாம், ஒவ்வொருவரும் இன்னும் உலகத்தின் மானிடர் எல்லோரும் அறிந்துகொள்ள வேண்டிய அடிப்படைச் செய்தி, மனிதனுடைய பாவங்களுக்கு, அவனுடைய ஆன்மீகத் தோல்விகளுக்கு விமோசனமும், மன்னிப்பும், இரட்சிப்பும் உண்டு என்பது. கடவுள் மறுப்பாளர்களைத் தவிர்த்து, ஏனைய எல்லோருமே தத்தம் ஆன்மீக வாழ்வில் ஒரு தேடலை உடையவர் களாகவே உள்ளார்கள். ஆகவே தான், அவரவர்களுக்குத் தெரிந்த வழிகளிலும், அவர்கள் நம்பும்படி அவர்களுக்குப் போதிக்கப்பட்ட நெறிகளிலும் நாட்டம் கொண்டு செயல்படுகிறார்கள். ஆயினும், பாவ விமோசனத்திற்குப் பலவழிகள் கிடையாது. உலகமும், உலகத்தின் இறைப் பற்றாளர்களும் ஏற்றுக்கொண்டாலும், ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் அதற்கான ஒரே வழி இயேசு மாத்திரமே. இயேசு ஆண்டவர் தாமே இவ்வுண்மையை, **நானே வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறேன்** [யோவான் 3:16] என்று கூறி பகிரங்கப்படுத்தியுள்ளார். இதே கருத்தை பவுலடியார் எபேசியருக்கு இங்ஙனம் கூறுகிறார். **அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின்படியே இவருடைய இரத்தத்தினாலே பாவ மன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது** என்று[எபே.1:7]. இவ்வளவு வல்லமை பெற்றிருக்கும் இயேசுவின் இரத்தம் அவருடைய சிலுவையில் தான் சிந்தப் பட்டது. ஆகவே தான், சிலுவை என் மேன்மை என்று பவுல் மார்தட்டுகிறார். புரிகிறதா?

அன்பானவர்களே! இயேசுவின் இரத்தத்திற்கு உலகில் வேறெதற்கும் இல்லாத வல்லமை இருக்கும் போது, நம்மில் எத்தனைப் பேர் அந்த இரத்தத்தின் வல்லமையை உணர்ந்து, அதற்காகச் செய்ய வேண்டியதைச் செய்து, பாவமன்னிப்பைப் பெற்று இரட்சிப்படைந்திருக்கிறோம்? என்னுடைய பாவம் அல்லது பாவங்கள் இயேசு சிந்தின இரத்தத்தின் வல்லமையின் கீழ் வராது என்று எந்தப் பாவமும் இல்லை. இப்பேருண்மையைப் புரிந்து கொண்டு, இயேசுவின் இரத்தத்தால் நம் பாவங்கள் கழுவப் படும்படியாய் நற்செய்தியின் உபதேசங்களுக்கு நம்மைக் கீழ்ப் படுத்தி, பரலோக பாக்கியத்திற்கு நம்மைத் தகுதிப்படுத்துவோம்.

### III சிலுவை என் மரணம் ஒரு முடிவு என்று சொல்லுவதில்லை

சிலுவைப் பித்தனாகிய பவுலடியாருக்குச் சிலுவை மேன்மை யாக இருந்ததிலிருந்து நம்மால் கற்றுக்கொள்ள முடிகின்ற இன்னுமொரு பாடம், மரணம் ஒரு முடிவு அல்ல என்பது.

மரணத்தைப் பற்றிய பார்வை மனிதனுக்குப் பலவிதமாக உள்ளது. அப்படிப்பட்ட பார்வைக்கான காரணம் அவனவன் கொண்டிருக்கும் இறைக் கோட்பாடே.

ஆனால், கிறிஸ்தவம் மறுபிறப்பு பற்றி பேசும் மார்க்கம். மரணம் என்பது ஆவியும், சரீரமும் பிரிக்கப்படும் ஒரு நிலை. மரணத்தின் மூலம் இந்தப் பிரிவு ஏற்படுகிறபோது மண்ணான மனித சரீரம் தான் முன்னிருந்த பூமிக்குத் திரும்பி, ஆவி தன்னைத் தந்த தேவனிடத்திற்கு மறுபடியும் போகிறது (பிரசங்கி 12:7). ஆக, இருக்கிறவன் இல்லாமற்போவதென்பது மரணமல்ல. மனிதன் மரித்தாலும் அவன் ஒருநாளில் உயிர்ப்பிக்கப்படுவான். இது குறித்துப் பவுலடியார் கூறும்போது, **ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறதுபோல, கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள்** என்கிறார் (1கொரி.15:22).

தெசலோனிக்கே சபையார் பக்தி வாழ்வில் மேம்பட்டவர்களாக இருந்தும் மரணம் பற்றியும், மரித்தோர் பற்றியும், சரியான பார்வை இல்லாமல் மரித்தவர்களுக்கு **கிறிஸ்துவின் வருகையில்** பங்கில்லை என்று எண்ணித் துக்கப்பட்டபோது, பவுலடியார் அவர்கள் ஆவிக்குரிய அறிவீனத்தைக் கடிந்து கொண்டதோடு, மரித்தோர் பற்றிய ஓர் உண்மையையும் இங்ஙனம் உறுதிப்படுத்தினார். **இயேசுவானவர் மரித்து பின்பு எழுந்திருந்தாரென்று விசுவாசிக்கிறோமே; அப்படியே இயேசுவுக்குள் நித்திரை அடைந்தவர்களையும் தேவன் அவரோடே கூடக் கொண்டு வருவார்** என்று (1தெச.4:14). ஆக, மரணத்திற்குப் பின்

உயிர்த்தெழுதல் உண்டு. கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் மட்டுமல்ல, கிறிஸ்துவுக்குள் மரியாதவர்களும் உயிர்ப்பிக்கப் படுவார்கள். ஏனெனில், எல்லோருக்கும் நியாயத்தீர்ப்பு உண்டு (எபி.9:27). **ஏனெனில், சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது தீமைக்காவது தக்க பலனை அடையும்படிக்கு நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்பட வேண்டும்** (IIகொரி.5:10).

சரி, அருமையானவர்களே! இங்கே நிச்சயமாகத் தெரிகிற ஒரு செய்தி என்ன? மரணத்திற்குப் பின்பு ஒரு வாழ்க்கை உண்டு. கிறிஸ்து சிலுவையில் மரித்ததோடு அவரது வாழ்க்கை முடியாமல், அவர் உயிரோடே எழுந்ததாலும், கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் அவரோடு கூட எழுப்பப்படுவார்கள் என்பதாலும், இன்னும், பிறந்த எல்லோரும் நியாயத்தீர்ப்புக்காக எழுப்பப்படுவார்கள் என்பதாலும் மறுமையின் வாழ்க்கை உறுதியாகிறது. அந்த வாழ்க்கை **நித்திய ஜீவனைக்** கொண்டதாகவோ, **நித்திய ஆக்கினை**க்கானதாகவோ இருக்கும் (மத்தேயு 25:46) நியாயத்தீர்ப்பிலே நித்திய ஜீவனுக்கானவர்களைப் பார்த்து, **வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானது முதல் உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற ராஜ்ஜியத்தை சுதந்தரித்துக் கொள்ளுங்கள்** என்பார் (மத்தேயு 25:34). நித்திய ஆக்கினைக்கானவர்களைப் பார்த்தோ, **சபிக்கப்பட்டவர்களே, என்னை விட்டு பிசாசுக்காகவும் அவன் தூதர்களுக்காகவும் ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற நித்திய அக்கினியிலே போங்கள்** (மத்தேயு 25:41) என்பார்.

சிலுவையின் நாயகர் இப்படி இன்னுமொரு வாழ்வை உறுதி செய்திருக்கிறபடியால், நாம் **ஆசீர்வதிக்கப்பட்டவர்களே** என்று அழைக்கப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு நம்மைத் தயார் செய்கிறோமா அல்லது **சபிக்கப்பட்டவர்களே** என்று கடிந்து கொள்ளப்பட்டு விரட்டப்படுவதற்கு ஏதுவானவர்களாகப் போகிறோமா! தீர்மானிக்க வேண்டிய நேரமிது. பவுலடியார், **ஆசீர்வதிக்கப்பட்டவனே** என்பதற்குத் தன்னை முற்றிலுமாகத் தகுதிப்படுத்தி, **நீதியின் கிரீடத்தையும்** (II தீமோ.4:8) உறுதி செய்த படியால் தான், சிலுவை என் மேன்மை என்று ஊர் ஊராகச் சென்று கூவிக்கூவிக் கூற முடிந்தது.

அப்படியானால் நாம் எப்படி? நமக்குச் சிலுவை மேன்மையாக இருக்கப் போகிறதா? அல்லது யூத மத போதகர்கள் போல மாம்சப்பெருமை மேன்மையாக இருக்கப் போகிறதா? சிந்தித்துச் செயல்படுவோம். தேவச் சித்தத்தை நிறைவேற்றுவோம். ஆமென்!

✝

# சபை கூடி வருதல்

**சகோ. சோட்**

சபை கூடி வருவதை விட்டு விடுதல், ஒரு கிறிஸ்தவன் செய்யக் கூடிய மிக வருந்தத்தக்க தவறுகளில் ஒன்று. பிற சகோதரர்களுடன் சேர்ந்து வந்து, ஆராதனையில் கலந்து கொண்டு கர்த்தரைக் கனப்படுத்தாத ஒருவன், நான் கர்த்தருக்கு உண்மையாக இருக்கிறேனென்று எப்படிச் சொல்ல முடியும்? அதாவது, இப்படியான நிலைமைகளில் ஒருவன் விசுவாசமாக இருக்க இயலாது.

பல பிரிவினைச் சபைகளைச் சார்ந்த மக்கள் வருடத்திற்கு இரு முறை மட்டுமே ஆராதனை வழிபாட்டில் கலந்து கொள்ளுகின்றனர். அவை தேவனுடைய வசனத்தில் கற்பிக்கப்படாத கிறிஸ்துமஸ். ஈஸ்டர், என்பவைகளாகும். ஆனால், கர்த்தரைப் பிரியப்படுத்த இது மட்டும் போதும் என நினைத்துக் கொண்டு, தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொள்ளும் நிறைய மக்கள் உள்ளனர். கர்த்தர் யார் என்று அவர்கள் நினைக்கின்றனர்? ஆனால், இன்னும் நெருங்கி வந்தால், சபை அங்கத்தினரில் பலர் கூட ஆராதனையில் கலந்து கொள்ளுவதில்லை. ஏதாவது ஒரு சாக்கு போக்கை மாற்றி மாற்றிச் சொல்லுகின்றனர். ஆராதனைக்கு வரத்தடையாக இருப்பது ஒன்று அவர்களுடைய வேலை அல்லது அதிக தூரம்! அது, இது அல்லது எதுவோ ஒன்று என சாக்குச் சொல்லுவர். ஆனால், கேள்வி என்னவென்றால் : கர்த்தர் இந்த சாக்குப் போக்குகளை ஏற்றுக் கொள்ளுவாரா? இங்கே இவர்களும் தாங்கள் கிறிஸ்தவர்கள் என உரிமை கொண்டாடுகின்றனர். ஆனால், அவர்கள் ஒருபோதும் ஆராதனையில் கலந்து கொள்ளுவதில்லை. அதற்கு மாறாக, அவர்கள் செய்ய விரும்பும் சொந்தக் காரியங்கள் எதற்கும் ஒரு போதும் தடை எதுவும் வருவதில்லை. பணி செய்யும் இடம் பத்து கிலோமீட்டர் தூரம் இருப்பினும் அதற்குத் தவறாமல் செல்ல முடிகிறது.

**நான் வீட்டிலேயே ஜெபம் செய்கிறேன்?** என்பது ஆராதனைக்கு வரத்தவறும் சிலரின் வழக்கமான வாதமாக இருக்கிறது. ஜெபிப்பது நல்ல காரியந்தான், கர்த்தர் அது மட்டும் போதும் என்று கூறியிருந்தால். இருப்பினும், அவருடைய மக்கள் வாரத்தின் முதல் நாள் கூடி வரவேண்டுமென்று அவர் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறாரே! அப்படி கூடி வரும் போது. அவர்கள் ஜெபம் செய்வதோடு மட்டுமல்ல, கற்றுக் கொள்ளவும், பாடவும், கர்த்தரின் பந்தியில் பங்கு பெறவும், தங்களால் இயன்ற அளவில் கொடுக்கவும் வேண்டியதாயிருக்கிறது.

இப்போது, தாங்களே வீட்டில் ஆராதிக்க முயலும் சிலர், தங்களுடைய காணிக்கைப் பணத்தை யாரிடம் கொடுப்பார்கள்? கர்த்தரின் பந்தியை எப்படி நடத்துவர்? இப்படிச் சொல்கிறவர்களில் பலர், அதிகமாகப் போனால், தங்களுடைய ஆராதனையில் கர்த்தருக்கு ஜெபம் ஏறெடுப்பதற்கு மேல் சென்று விடுவதில்லை. தேவனிடம் ஜெபம் செய்வதற்கும் மேலாக இன்னும் அநேக காரியங்கள் ஆராதனையில் உண்டு என்பதை அவர்களுக்குக் கற்றுத்தர வேண்டியதாகிறது.

வியாதி அல்லது இன்னும்பிற எதிர்பாராத காரியங்களால் ஏற்படும் சூழ்நிலைகளில் கிறிஸ்தவர்கள் ஆராதனைகளில் கலந்து கொள்ள முடியாமல் தடைபட்டுப் போவது சில வேளைகளில் உண்மையே. இந்த காரியத்தில் சாக்கு போக்குச் சொல்லத் தேவையில்லை. ஏனெனில், வராமலிருக்க சரியான காரணம் இங்கு இருக்கிறது. மேலுமாக, வராமலிருப்பதற்கான ஒரு சரியான காரணத்தை கர்த்தர் ஏற்றுக் கொள்வார்; ஆனால், ஒரு சாக்கு போக்கை அவர் ஒருபோதும் ஏற்றுக் கொள்ளமாட்டார்.

இப்போது, சபை கூடி வருவதைப் பற்றி தேவனுடைய வசனமே கூறுவதைக் கவனிப்போம். எபிரெய எழுத்தர் எழுதுகிறார்: ‘அல்லாமலும், நம்முடைய நம்பிக்கையை அறிக்கையிடுகிறதில் அசைவில்லாமல் உறுதியாயிருக்கக் கடவோம்; வாக்குத் தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவராயிருக்கிறாரே. மேலும், அன்புக்கும் நற்கிரியைகளுக்கும் நாம் ஏவப்படும்படி ஒருவரை ஒருவர் கவனித்து; சபை கூடி வருதலைச் சிலர் விட்டு விடுகிறது போல நாமும் விட்டுவிடாமல், ஒருவருக்கொருவர் புத்தி சொல்லக் கடவோம்: நாளானது சமீபித்து வருகிறதை எவ்வளவாய்ப் பார்க்கிறீர்களோ அவ்வளவாய்ப்புத்தி சொல்ல வேண்டும். சத்தியத்தை அறியும் அறிவை அடைந்த பின்பு நாம் மனப்பூர்வமாய் பாவஞ்செய்கிறவர்களாக இருந்தால், பாவங்களினிமித்தம் செலுத்தத்தக்க வேறொரு பலி இனியிராமல், நியாயத் தீர்ப்பு வருமென்று பயத்தோடே எதிர்பார்க்குதலும், விரோதிகளைப் பட்சிக்கும் கோபாக்கினையுமே இருக்கும். (எபி. 10:23-27). இப்போது, இவற்றின் முக்கிய கருத்துகளைக் கவனிப்போம்.

1. நாம் தொடர்பு கொண்டுள்ள ஒருவர். நம்முடன் தொடர்பு கொள்ளும் போது, அவர் எவ்வளவு தூரம் உண்மையாயிருக்கிறாரோ அதைப்போல நாமும் அவரிடம் உண்மையாக நடந்து கொள்ள வேண்டும்.

2. ஒருவருக்கொருவர் உள்ள தொடர்பில் எப்போதுமே நற்கிரியைகளைத் தொடர்ந்து செய்ய வேண்டும்.

3. நாம் சபை கூடி வருவதை விட்டு விடலாகாது. அன்றும் சிலர் விட்டு விட்டனர். இன்றும் கூடிவருதலை சிலர் விட்டுவிடுகின்றனர். ஆனால், இது கர்த்தரின் விருப்பம் அல்ல.

4. நாள் நெருங்கி வரும் போது. அதாவது கர்த்தரின் நாளாகிய ஆராதனை நாள் நெருங்கி வரும் போது, சபை கூடுவதில் கலந்து கொள்ள ஒருவரை ஒருவர் ஊக்கப்படுத்த வேண்டும். அதாவது, அந்நாளுக்காக நம்மை நாமே தயார்படுத்திக் கொள்ள வேண்டும். இவ்வாறு செய்ய ஒரு வாரம் முழுவதும் நமக்கு இருக்கிறது.

5. சத்தியத்தைக் கற்றுக் கொண்டபின், வேண்டுமென்றே நாம் பாவம் செய்தால், நமக்காக எந்த பலியும் இனி இல்லை என்பதையும், நியாயத் தீர்ப்பையும் சாபத்தையும் தவிர வேறு எதையும் எதிர்பார்க்க வேண்டியதில்லை என்பதையும் நாம் நினைவில் வைத்துக் கொள்ளவேண்டும். அதாவது, நாம் வேண்டுமென்றே சபை கூடி வருதலைப் புறக்கணித்து, நாம் செய்ய வேண்டிய காரியங்களை செய்யத் தவறினால், அவரை நாம் புறக்கணித்த பின், கர்த்தர் நம்மை எப்படி இரட்சிக்க முடியும்? ஆகையால் நாம் தொடர்ந்து ஆராதனையைப் புறக்கணித்தால் வீழ்ந்து போனவர்களாவோம்.

– தொடரும்... †

## அவிசுவாசியைப் பார்த்து இயேசு கேட்கும் கேள்விகள்

1) **உன் விசுவாசம் எங்கே ? - லூக்கா** 8:25

2) **ஏன் பயப்பட்டீர்கள் - மத்தேயு** 8:26

3) **அவிசுவாசியாயிராமல் விசுவாசியாய் இரு - யோவான்** 20:27

4) **அற்ப விசுவாசியே - மத்தேயு** 16:8

5) **விசுவாசமில்லாத மாறுபாடுள்ள சந்ததியே - மத்தேயு** 17:17

பெண்கள் பகுதி

# தகப்பன், மகன் பாசம்

Sis. ரேச்சல் இராஜநாயகம்

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதரிகள் யாவருக்கும் கிறிஸ்து இயேசுவின் நாமத்தினால் வாழ்த்துக்களையும், ஸ்தோத்திரங்களையும் ஏறெடுத்துக் கொள்கிறேன். இம்மாதமும் தேவனுடைய வார்த்தைகளை சேர்ந்து கற்றுக் கொள்வோம்.

தேவன் நமக்குப் பயமுள்ள ஆவியைக் கொடாமல், பலமும் அன்பும் தெளிந்த புத்தியுமுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார் (II தீமோ 1:7). இந்த வார்த்தைகள் பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு, அப். பவுலின் மூலமாக, சில சூழ்நிலைகளால் மிகவும் பயந்து போயிருந்த இளைய ஊழியக்காரனும், தன் உத்தம குமாரனுமாகிய தீமோத்தேயுவுக்கு எழுதினது. இந்த வசனங்களை எழுதும்போது பவுல் இரண்டாம் முறையாக சிறையில் அடைக்கப்பட்டு மரணத்தை சந்திக்கும் தருவாயில் தீமோத்தேயுவை தேற்றும்படி எழுதப்பட்டது. தீமோத்தேயு, பவுலுக்கு பிரியமான உத்தம குமாரன் தான் சார்ந்திருந்த வழிகாட்டியும், ஆவிக்குரிய தகப்பனுமாகிய பவுலின் நிலை எப்படியோ? என்ற நிலையில் தீமோத்தேயுவுக்கு இருந்த மனநிலையையும், பயத்தையும் நாம் கற்பனை செய்து பார்க்க முடிகிறதில்லையா? இந்நிலையில் பவுல் தன் எழுத்துக்களில் பயம் வேண்டாம், தேவன் நமக்கு பயமுள்ள ஆவியை கொடுக்கவில்லை. மாறாக பலமும், அன்பும், தெளிந்த புத்தியுமுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார் என்று எழுதி தீமோத்தேயுவை தைரியப்படுத்துகிறார். பயம் ஒருவனை ஊனமாக்கி, பலவீனப்படுத்தி, ஆவிக்குரிய வியாதியை கொடுத்து அவைகள் நம்மை கட்டுப்படுத்தி, மேற்க்கொள்ளச் செய்துவிடும். பயத்தையும் அன்பையும் இங்கு நாம் வேறுபடுத்தி பார்க்க முடியும். I யோவான் 4:18 இவ்வாறாகக் கூறுகிறது, **அன்பிலே பயம் இல்லை; பூரண அன்பு பயத்தை புறம்பே தள்ளும்; பயமானது வேதனையுள்ளது பயப்படுகிறவன் அன்பில் பூரணப்பட்டவன் அல்ல** பழைய பிரமாணம் (மோசேயின்) பயத்தை கொடுத்தது. இயேசுவின் பிரமாணம் அன்பால் ஆனது.

பயம் ஒரு சிறைச்சாலை போன்றது. **ஆதாமும், ஏவாளும் பாவஞ்செய்து பயந்ததினால் தேவனாகிய கர்த்தருடைய சந்நிதிக்கு விலகி, தோட்டத்தின் விருட்சங்களுக்குள்ளே ஒளிந்துக் கொண்டார்கள்** (ஆதி 3:8). நாம் பயப்படும்போது ஒவ்வொருவரிடமிருந்தும், எல்லோரிடமிருந்தும் நம்மை நாமே ஒளித்து சிறைப்படுத்திக் கொள்வோம். பயமுள்ள ஆவியோடிருக்கும் ஒருவன் ஒருபோதும் தன் மனம் வசதியாக விரும்பும் காரியத்தை விட்டு வெளியே வரவே முடியாது. ஏனென்றால், பயம் என்ற சிறையில் தன்னை வைத்து

பூட்டி, பயமே தன்னை ஆளும்படியும், வழிநடத்தும்படியும் அனுமதி கொடுத்து விடுகிறான். சிறிய பெட்டிக்குள் தன்னை அடைத்து வைத்து, ஒருபோதும் நிறைவான நன்மையை அடையவே முடியாமல் செய்து விடுகிறான். நீங்களும் இப்படி பயத்துக்கு அடிமைகளாய் இருக்கிறீர்களா?

பயம் நம் முன்னேற்றத்தை கெடுத்து விடக் காரணமாயிருக்கும். சமமான இரும்பு சட்டத்தின் மேல் நடப்பதை பார்த்திருக்கிறீர்களா? தரையை பார்க்காமல் சட்டத்தை மட்டும் பார்த்து நடந்தால் இலக்கை அடைந்து விடலாம். பயம் நம்மை கீழே தள்ளிவிடுகிறது. நோவாவின் இருதயத்தில் பயம் இருந்திருந்தால் அவ்வளவு பெரிய பேழையை கட்டியிருக்க முடியுமா? பயமில்லாமல் தேவன் சொன்னபடியெல்லாம் சந்தேகமின்றி, நம்பி செய்தான். காப்பாற்றப்பட்டான். காற்றையும், அலையையும் பார்த்து, முன்னேறிச் செல்வதை மறந்ததினால் பேதுரு கடலில் அமிழப் பார்த்தான் (மத் 14:30). பயம் இருக்கும்போது நம் முன்னேற்றம் வளைந்து, சரிந்துவிடும், அழிவு நிச்சயம்.

பயம், தேவனுடைய வாக்குத்தத்தங்களை மறக்கச் செய்துவிடும். இயேசு கிறிஸ்து பாடுபட்டு சிலுவையில் மரித்து, அடக்கம் செய்யப்பட்டபோது சீஷர்கள் பயந்து தாம் மீண்டும் மூன்றாம் நாள் எழுந்திருப்பேன் என்று சொன்னதை மறந்து விட்டார்கள் (மத் 16:21). அவர்கள் சிதறி, தங்களை மறைத்துக் கொண்டார்கள். ஆவிக்குரிய மறதியை பயம் அவர்களுக்கு ஏற்படுத்தினது. தேவன் நமக்கு தந்தருளிய மகா பெரிய வாக்குத்தத்தங்களை நம் வாழ்க்கையிலும் பயம் மறக்கடிக்கச் செய்துவிடுகிறது. உலகம் நமக்கு விரோதமாய் எழும்பும்போது, தேவன் நம்முடைய பட்சத்திலிருந்தால் நமக்கு விரோதமாயிருப்பவன் யார்? ( ரோமர் 8:31 ; மத் 10:28) என்ற வசனங்களை மறந்து விடுகிறோம்.

நாம் பயந்துபோய் தனிமையில் இருக்கும்போது **நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை என்று அவர் சொல்லியிருக்கிறாரே** (எபி 13:5) என்பதை நினைத்துக் கொள்ள வேண்டும். பயத்தினால் எதிர்காலம் எப்படியிருக்குமோ என்று கலங்கும் போது, **ஆகையால், தேவனுடைய ஜனங்களுக்கு இளைப்பாறுகிற காலம் இனி வருகிறதாயிருக்கிறது** (எபி 4:9) என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

பயம் இன்றைக்கு தனி நபரையும், சபையையும் முடக்கிவிடுகிறது. அருமையானவர்களே பயந்து கொண்டிருந்தால் தேவனுக்காக பணியை செய்யவே முடியாது. பயமல்ல, விசுவாசமே மலைகளை பெயர்க்க வல்லது. பயந்தோமென்றால் தடைகளும் நிலையற்ற சூழ்நிலைகளும் தான் மிஞ்சும். பயத்தை விசுவாசத்தால் வெல்ல வேண்டும். ஏனென்றால், **தேவன் நமக்கு பயமுள்ள ஆவியைக் கொடாமல், பலமும் அன்பும் தெளிந்த புத்தியுமுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார்** ( II தீமோ. 1:7) ஆமென்!!

வாலிபர் பகுதி

# கனிகளினாலே அவர்களை அறிவீர்கள்

Dr. **ஏபில் நாயகம்**

**கி**றிஸ்துவுக்குள் பிரியமான வாலிபர்களே உங்கள் யாவருக்கும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இன்ப நாமத்தில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த மாதம் உங்களை சந்திப்பதில் பெரு மகிழ்ச்சி அடைகிறேன். தேவன் தாமே சமாதானத்தை கட்டளையிடுவாராக. இந்த மாதம் நெகேமியா விடமிருந்து ஒரு முக்கியமான பாடத்தை கற்றுக்கொள்ள முயற்சி செய்யலாம். பெர்சிய ராஜாவாகிய அர்தசஷ்டாவின் பான பாத்திரக்காரனாக இருந்த ஒருவர்தான் நெகேமியா. இந்த நபரை குறித்து அதிகமாக பேசப்படுகிற ஒரு காரியம் எருசலேம் நகரத்தின் அலங்கம் மீண்டும் கட்டப்படுவதற்கு முக்கியமான ஒரு காரணமாக இவர் இருந்தார். இவருடைய முயற்சியால் 52 நாட்களில் எருசலேம் நகரத்தின் அலங்கம் மீண்டும் கட்டி எழுப்பப்பட்டது. தனக்கு நேரிட்ட எல்லா விதமான தடைகளையும் மீறி ஜனங்களை ஒன்றிணைத்து வெற்றி கரமாக இவர் செயல்பட்டதை நாம் வாசித்து அறிந்து கொள்ள முடியும். நெகேமியாவின் முயற்சிகள் எல்லாவற்றையும் தேவன் வாய்க்கப் பண்ணினார் என்பதையும் நாம் அறிவோம். அடிமைத்தனத்தில் இருக்கிற ஒரு யூதனாக இருந்தாலும், தேவன் மீது விசுவாசமும் நம்பிக்கையும் உள்ளவராக நெகேமியா இருந்திருக்கிறார்.

இதுவும் நமக்கு ஒரு பாடத்தை கற்றுக் கொடுக்கிறது. நம்முடைய சூழ்நிலைகளை நாம் காரணம் காட்டி, இன்ன காரியத்தினாலே என்னுடைய விசுவாசம் குறைந்தது, இந்த சூழ்நிலையினாலே என்னுடைய நம்பிக்கை குறைந்து போனது என்று நாம் சொல்வதை தவிர்த்துக் கொள்ள வேண்டும். சூழ்நிலைகள் எப்படிப்பட்டதாக இருந்தாலும் தேவன் மீது நம்பிக்கை உள்ள பிள்ளைகளாக நாம் இருக்கும் பொழுது தேவன் நம்மோடு இருக்கிறார் என்பதை நாம் புரிந்து கொள்ள முடியும். நெகேமியா மட்டுமல்ல, அடிமைத்தனத்திலே நெகேமியாவுக்கு முன்பாக இருந்த தானியேலும் அவரது நண்பர்களும் எவ்வளவு உறுதியாக இருந்தார்கள் என்பதை நாம் அறிவோம். மதுபானத்தினாலே தங்களை அசுத்தப்படுத்தாமல், தேவன் விரும்பாத செயல்களை செய்யாமல், விக்கிரகங்களைத் தொழுது கொள்ளாமல் கடினமான சூழ்நிலையிலும் அவர்கள் தேவன் மீது நம்பிக்கையோடு இருந்தார்கள்.

எனவே, நாம் நம்முடைய சூழ்நிலைகளை சாக்கு போக்காக சொல்வது சரியானதாக இருக்க முடியாது.

சரி, நெகேமியா அதிகாரம் 5 யூதர்களின் சமூக சிக்கல்களையும் நெகேமியாவின் தீர்வுகளையும் விவரிக்கிறது. மக்களிடம் உணவு பற்றாக்குறையால், சிலர் தங்கள் நிலங்களையும் வீடுகளையும் அடகு வைத்தனர். மேலும், பிறர் கடன்களைத் திருப்பிச் செலுத்த முடியாததால் தங்கள் பிள்ளைகளை அடிமைகளாக விற்க வேண்டிய நிலைமையில் இருந்தனர். இதனால் மக்களிடையே பெரும் வேதனை ஏற்பட்டது. இந்த அநீதியை கேட்டு, நெகேமியா மிகவும் கோபமடைந்தார்.

நாம் முக்கியமாக கவனிக்க வேண்டிய வசனங்கள் 14 மற்றும் 15.'**14 நான் யூதாதேசத்திலே அதிபதியாயிருக்கும்படி ராஜாவாகிய அர்தசஷ்டா எனக்குக் கற்பித்த நாளாகிய அவருடைய இருபதாம் வருஷம் தொடங்கி, அவருடைய முப்பத்திரண்டாம் வருஷம் வரைக்கும் இருந்த பன்னிரண்டு வருஷகாலமாய், நானும் என் சகோதரரும் அதிபதிகள் வாங்குகிற படியை வாங்கிச் சாப்பிடவில்லை.**

**15 எனக்கு முன்னிருந்த அதிபதிகள் ஜனங்களுக்குப் பாரமாயிருந்து, அவர்கள் கையிலே அப்பமும் திராட்சரசமும் வாங்கினதும் அல்லாமல், நாற்பதுசேக்கல் வெள்ளியும் வாங்கிவந்தார்கள்; அவர்கள் வேலைக்காரர் முதலாய் ஜனங்கள்மேல் அதிகாரம் செலுத்தினார்கள்; நானோ தேவனுக்குப் பயந்ததினால் இப்படிச் செய்யவில்லை.** 'இந்த இரண்டு வசனங்களும் நெகேமியா யார் என்பதை நமக்கு காட்டுகிறது. அந்நிய மண்ணிலே, புறஜாதியார் மத்தியிலே வாழ்ந்த நெகேமியா இந்த வார்த்தைகளை சொல்லியிருக்கிறார். தனக்கு முன்பாக இருந்த அதிபதிகள் ஜனங்களுக்கு பாரமாக இருந்து அநியாயமாக அவர்களை நடத்தி, அதிகமாக வரிகள் வசூலித்து நெருக்கடியை கொடுத்தார்கள். ஒருவேளை நெகேமியா நினைத்திருந்தால் அவர்களைப் போலவே ஜனங்களை கடினமாக நடத்தி அநியாயமாக பொருளையும் பணத்தையும் பெற்று இருந்திருக்க முடியும். ஆனால் அவர் அப்படி செய்யவில்லை. அதற்கு அவர் கொடுத்த காரணம் **'நானோ தேவனுக்குப் பயந்ததினால்'** என்பது.

நாம் கவனிக்க வேண்டிய ஒரு காரியம் தேவனுக்கு பயப்படுகிற ஒரு மனிதனுடைய செயல்பாடும், தெய்வ பயம் இல்லாத ஒரு மனிதனுடைய செயல்பாடும் ஒரே விதமாக இருக்கக் கூடாது என்பதிலே நெகேமியா கவனமாக இருந்திருக்கிறார். இதுதான் இந்த மாதத்திற்கான பாடம்.

பிரியமானவர்களே, நம்முடைய சொல், செயல், சிந்தனை, எதை காண்கிறோம், எதைக் கேட்க பிரியப்படுகிறோம், எங்கே செல்கிறோம் என்று நம்முடைய கிரியைகளை நாம் சுய பரிசோதனை செய்து பார்க்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம். இந்த பரிசோதனையில் தேவனுக்கு பயப்படுகிறேன் என்று சொல்லுகிற என்னுடைய

கிரியைக்கும், தேவனுக்கு பயப்படாதவர்களுடைய கிரியைக்கும் வித்தியாசம் இருக்கிறதா என்பதை கவனமாக பார்க்க வேண்டும். தேவனுக்கு பயப்படுகிறேன் என்று நாம் சொல்லுவோம் என்றால் நம்முடைய கிரியை அதை பிரதிபலிக்கிற வண்ணம் இருக்க வேண்டும். கேள்வி என்னவென்றால் அப்படி இருக்கிறதா?

நினைத்திருந்தால், நெகேமியா எனக்கு முன்பாக அதிபதிகளாக இருந்தவர்கள் அப்படித்தானே செய்தார்கள். எனவே, நான் செய்வதில் தவறு ஒன்றுமில்லை என்று சொல்லி ஜனங்களை கடினமாக நடத்தி இருக்கலாம். ஆனால், அவர் அப்படி செய்யவில்லை. பல வேளையில் நம்முடைய தவறை நியாயப்படுத்துவதற்கு இப்படிப்பட்ட காரணத்தைதான் கூறுகிறவர்களாக இருக்கிறோம். என்னுடைய நண்பன் செய்தான், எனவே நான் செய்தேன்; என்னுடைய நண்பன் பார்த்தான், அதனால் நான் பார்த்தேன்; என்னுடைய நண்பன் போனான், பிறகு நானும் போனேன்; என்று நம்மை சுற்றி இருக்கிறவர்கள் செய்கிற காரியத்தை நாமும் செய்வதற்கு சூழ்நிலைகளை நாம் காரணமாக காட்டுகிறோம். ஆனால், அப்படி செய்யும் பொழுது என்னுடைய கிரியைக்கும் தேவனுக்கு பயப்படாத ஒரு நபருடைய கிரியைக்கும் வித்தியாசம் இருக்க வேண்டும் என்பதை மறந்து விடுகிறோம்.

பிரியமானவர்களே இந்த மாதத்திற்கான பாடம் இதுதான். தேவனுக்கு பயப்படுகிறேன் என்று சொல்லுகிற நாம், தேவனுடைய பிள்ளை என்று நம்புகிற நாம் அதை சொல்லிலே, செயலிலே, சிந்தனையிலே காட்ட முயற்சி செய்ய வேண்டும். முக்கியமாக தேவனுக்குப் பயப்படாதவர்கள் செய்யும் காரியத்திற்கும், நம்முடைய செயல்பாட்டிற்கும் நிச்சயம் வித்தியாசம் இருக்க வேண்டும் என்பதிலே உறுதி கொள்ள வேண்டும். †

## எப்படி நடக்க வேண்டும் ?

- அழைப்புக்குப் பாத்திரமாக நடக்க வேண்டும்...
- பத்திரமாக நடக்க வேண்டும்...
- பரிசுத்தமாக நடக்க வேண்டும்...
- நேராக நடக்க வேண்டும்...
- சீராக நடக்க வேண்டும்...
- வலது இடது புறம் சாயாமல் நடக்க வேண்டும்...

சிறுவர் பகுதி

# தேவமனிதன் – 7

Dr. பிரெய்ஸி

**ஹெ**லோ குழந்தைகளே! நீங்கள் அனைவரும் நன்றாக இருப்பீர்கள் என்று நம்புகிறோம். எங்கள் கட்டுரைகளை ஒவ்வொரு மாதமும் படித்து வருகிறீர்கள் என்று நாங்கள் நம்புகிறோம். இந்த மாதமும் 4 தேவ மனிதர்கள் பற்றி பார்ப்போம்.

யூதாவின் ராஜாவாகிய யோயாக்கீம் அரசாண்ட மூன்றாம் வருஷத்திலே பாபிலோனின் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் எருசலேமுக்கு வந்து, அதை முற்றிக்கை போட்டான். அப்பொழுது ஆண்டவர் யூதாவின் ராஜாவாகிய யோயாக்கீமை அவன் கையில் ஒப்புக்கொடுத்தார். அப்பொழுது இஸ்ரவேல் புத்திரருக்குள்ளே ராஜகுலத்தார்களிலும் துரைமக்களிலும் யாதொரு மாசும் இல்லாதவர்களும், அழகானவர்களும், சகல ஞானத்திலும் தேறினவர்களும், அறிவில் சிறந்தவர்களும், கல்வியில் நிபுணரும், ராஜாவின் அரமனையிலே சேவிக்கத் திறமையுள்ளவர்களுமாகிய சில வாலிபரை கொண்டுவரவும், அவர்களுக்குக் கல்தேயரின் எழுத்தையும் பாஷையையும் கற்றுக்கொடுக்கவும் ராஜா தன் பிரதானிகளின் தலைவனுக்கு கற்பித்தான். ராஜா, தான் உண்ணும் போஜனத்திலேயும் தான் குடிக்கும் திராட்சரசத்திலேயும் தினம் ஒரு பங்கை அவர்களுக்கு நியமித்து, அவர்களை மூன்றுவருஷம் வளர்க்கவும், அதின் முடிவிலே அவர்கள் ராஜாவுக்கு முன்பாக நிற்கும்படி செய்யவும் கட்டளையிட்டான். அவர்களுக்குள் யூதா புத்திரராகிய தானியேல், அனனியா, மீஷாவேல், அசரியா என்பவர்கள் இருந்தார்கள். தானியேல் ராஜாவின் போஜனத்தினாலும் அவர் பானம்பண்ணும் திராட்சரசத்தினாலும் தன்னைத் தீட்டுப்படுத்தலாகாதென்று, தன் இருதயத்தில் தீர்மானம்பண்ணிக்கொண்டு, தன்னைத் தீட்டுப்படுத்தாத படி பிரதானிகளின் தலைவனிடத்தில் வேண்டிக்கொண்டான்.

அன்புள்ள குழந்தைகளே, உலகில் இருந்து வேறுபட்டு இருக்க தயாரா?? தானியேலும் அவருடைய நண்பர்களும் மற்றவர்களைப் போல பாவம் செய்ய விரும்பவில்லை. ராஜாவின் கட்டளையாக இருந்தபோதிலும், அவர்கள் சரியானதைச் செய்வதில் உறுதியாக இருந்தனர். குழந்தைகளே அடுத்து என்ன நடந்தது தெரியுமா?

தேவன் தானியேலுக்குப் பிரதானிகளின் தலைவனிடத்தில் தயவும் இரக்கமும் கிடைக்கும்படி செய்தார். பத்துநாள் சென்றபின்பு, ராஜபோஜனத்தைப் புசித்த எல்லா வாலிபரைப் பார்க்கிலும் தானியேல், அனனியா, மீஷாவேல், அசரியாவின் முகம் களையுள்ளதாயும், சரீரம் புஷ்டியுள்ளதாயும் காணப்பட்டது. இந்த நாலு வாலிபருக்கும் தேவன் சகல எழுத்திலும் ஞானத்திலும் அறிவையும் சாமர்த்தியத்தையும் கொடுத்தார்.

அன்புள்ள குழந்தைகளே, நீங்கள் தேவனுக்கு அருகில் செல்லும்போது, அவர் உங்கள் அருகில் வருகிறார். அவருடைய வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிந்து, சர்வவல்லவரின் பார்வையில் சரியாக நில்லுங்கள்.

**அன்புடன்,**
**உங்கள் பிரெய்ஸி அக்கா.**

✝

## தேவன் எப்படி அழைக்கிறார்

1) வருத்தப்பட்டுப் பாரஞ் சுமக்கிறவர்களே - மத் 11:28

2) ஓ தாகமாயிருக்கிறவர்களே - ஏசாயா 55:1

3) பணம் இல்லாதவர்களே - ஏசாயா 55:1

4) என் பிள்ளைகளே - யோவான் 21:5

5) என் பிரியமே - உன்னதப்பாட்டு 2:10

6) என் பிதாவினால் ஆசீர்வதிக்கபட்டவர்களே - மத்தேயு 25:34

# ஜனங்கள் விருப்பத்துடன் கேட்டார்கள்

**சகோ. K. M. பிலிப் – பவானி**

இயேசு இப்பூமியில் வாழ்ந்த நாட்களில் அநேகர் இயேசுவிடம் வந்தார்கள். இதில் வியாதியஸ்தர்கள், ஊனமுற்றோர், காது கேளாதோர், குருடர்கள், பிசாசு பிடித்தவர்கள். இயேசுவிடம் வந்து சுகம் பெற்று சந்தோஷமாய் சென்றார்கள். இது ஒரு மகிழ்ச்சிக்குரிய செய்தி. அதேசமயம் ஆங்காங்கே அவரிடம் வந்து கூடிய மக்களையும், அவர்களுடைய மனநிலையையும் நாம் ஆராய்ந்து பார்ப்பது இயேசுவிடம் வந்திருக்கிற நம் விசுவாச வாழ்க்கைக்கு உற்சாகத்தையும், ஊக்கத்தையும் கொடுக்கும் என்று விசுவாசிக்கிறேன். இருதயத்தை ஆயத்தப்படுத்தி செய்தியை கவனிப்போம்.

லூக்கா 21:38–ல் **ஜனங்கள் எல்லோரும் அவருடைய உபதேசத்தைக் கேட்கும்படி அதிகாலமே தேவாலயத்தில் அவரிடத்திற்கு வருவார்கள்** என்று பார்க்கிறோம். இந்த மக்கள் இயேசுவின் ஜீவனுள்ள இயேசுவின் வார்த்தைகளை கேட்பதில் தங்கள் வாழ்க்கையில் முதலிடம் கொடுத்தார்கள் என்பதைத்தான் நாம் கவனிக்க வேண்டும். இதைத்தான் தாவீது, '... **காலையிலே உமக்கு நேராக வந்து ஆயத்தமாகி காத்திருப்பேன்** என்கிறார் (சங் 5:3). இந்த ஆயத்தமும், விழிப்புணர்வும்தான் ஆடு மேய்த்த தாவீதை மக்களை மேய்க்கும் ராஜாவாக உயர்த்தியது. அவருக்கு எங்கும் எதிலும் வெற்றியே கிடைத்தது. சோர்வுகள், போராட்டங்கள் வந்த போதிலும் அதிகாலையில் தேவனைத் தேடிய தாவீதின் வாழ்க்கையில் தேவன் திருப்தியையே கொடுத்து வந்தார் (சங் 17:15). பிரியமானவர்களே! நாமும் அதிகாலையில் முதல் மணித்துளியை தேவ வசனத்தின் மீது செலுத்தி, தேவ சமூகத்தை நோக்கி ஜெபித்து, **அதிகாலையில் உமது கிருபையைக் கேட்கப்பண்ணும்; உம்மை நம்பியிருக்கிறேன். நான் நடக்க வேண்டிய வழியை எனக்குக் காண்பியும்** என்று ஒவ்வொரு நாளையும் தேவனிடத்தில் ஒப்புக் கொடுப்போமேயானால் ஒவ்வொரு நாளையும் நன்மையால் திருப்தியாக்குவார் (சங் 143:8).

இங்கு இன்னுமொரு தேவ ஆலோசனையையும் கற்றுக்கொள்ள வேண்டும். நாம் வாரத்தின் முதல் நாளில் சபை கூடிவருகிறோம். சபை கூடி வருவதில் நேரம் தீர்மானிக்கப்பட்ட ஒன்றாயிருக்கிறது. அப்படியென்றால் சபை கூடுவதில் குறித்த நேரத்திற்கு முன்னதாக வருவதில் நம்முடைய ஆயத்தமும், ஆர்வமும் எந்தளவில் உள்ளது. சற்று முன்னதாக வந்து தேவ சமூகத்தில் காத்திருக்கிறோமா?' மத் 18:20 ல், **ஏனெனில் இரண்டு பேராவது மூன்று பேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன்** என்று சொன்ன இயேசு சபை கூடுவதில் வந்து காத்திருப்பாரே, அவரை நாம் காக்க வைக்கலாமா? முன்னதாக

ஆயத்தமாகி விருப்பத்தோடே வந்து குமாரனைக் கனப்படுத்த வேண்டும் அல்லவா? சிலர் கர்த்தருடைய பந்திக்கு மட்டும் வந்து கலந்து கொள்வதை வழக்கமாக வைத்திருப்பதை தேவன் அங்கீகரிப்பாரா? கர்த்தருடைய பந்தியை ஒரு சடங்காக நினைப்பது சரியா? ஆராதனையில் பங்கு பெறுவதென்பது முழு இருதயத்தோடும், முழு ஆத்துமாவோடும், முழு பெலத்தோடும் தேவனிடத்தில் அன்பு கூர்ந்து, ஆயத்தத்தோடும் வந்து முழுமையாய் பங்கு பெற வேண்டும் என்பதே வேதம் நமக்குக் கற்றுக் கொடுக்கும் பாடம். ஆம் அவருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிவதில் (கேட்பதில்) விருப்பம் வேண்டும். அதுவே நம் விசுவாசத்தை பெலப்படுத்தும். வேதம் கொடுக்கும் ஆலோசனைகள் நம்முடைய எண்ணங்கள் ஸ்திரப்படும் (நீ 20:18). **நாம் ஒருமித்து இன்பமான ஆலோசனை பண்ணி கூட்டத்தோடே தேவாலயத்திற்கு (சபைக்கு) போவோம்** என்ற தாவீதின் அனுபவம் நமதாகட்டும் (சங் 55:14).

இயேசுவிடம் வந்தவர்களில் நாம் கற்க வேண்டிய மற்றொரு பாடம், **அநேக ஜனங்கள் அவருடைய உபதேசத்தை விருப்பத்தோடே கேட்டார்கள்** என்பதாகும் (மாற்கு 12:37). இவர்கள் மற்றவர்களுடைய கட்டாயத்தினாலோ, பாரம்பரியத்தினாலோ, பழக்கதோசத்தினாலோ, பக்கத்திலிருப்பதினாலோ, வராமல் அவரவர் விருப்பத்தோடே வந்தார்கள். வசனத்தைக் கேட்பதில் விருப்பம் இருந்தது. வேதனைகளை, பிரச்சனைகளை, பாவங்களை உருவாக்கும் வீண் சிந்தனைகளை வெறுத்து விடுவோம் அது நம் வாழ்க்கையை வீணாக்கிவிடும். கர்த்தருடைய வேதத்தில் பிரியப்படுவோம் அது நம் வாழ்வை செழிப்பாக்கும், வாழ வழி வகுக்கும் (சங் 119:113). தடுமாற்றமின்றி அவருடைய கட்டளைகள் நம்மை விசாலத்திலே நடத்தும் (45). இயேசுவின் வார்த்தையை சந்தோஷமாய் ஏற்று கீழ்ப்படிந்ததால், **பாவி** என்று வெறுக்கப்பட்ட அதே மக்களுக்கு முன் இயேசுவால் பாவ விடுதலைபெற்று ஆபிரகாமின் குமாரனாய் நிமிர்ந்து விசாலமாய் நடக்கும் வாய்ப்பு சகேயுவுக்கு கிடைத்தது (லூக் 19: 1-10). அன்பானவர்களே! நாம் தேவனுடைய வார்த்தையை விருப்பத்தோடு கேட்டு, மனந்திரும்பி பாவம் கழுவப்பட ஞானஸ்நானம் பெற்றதால் கர்த்தரால் சபையில் சேர்க்கப்பட்டு **கிறிஸ்தவர்கள்** என்ற உன்னத புதிய நாமத்தை தரித்துக்கொண்ட நாம் பாவத்திற்கு விலகி விசாலமாய் நடப்போம் (அப் 11:26).

இப்பொழுது நம் விருப்பத்தை ஆதித்திருச்சபையோரோடு ஒப்பிட்டுப் பார்ப்போம். அப் 16:13- 15 ல் அப்போஸ்தலனாகிய பவுல் பிலிப்பி பட்டணத்திற்கு வந்தார். அங்கு ஓய்வு நாளில் பட்டிணத்திற்கு வெளியே ஆற்றினருகே வழக்கமாய் உபதேசிக்கின்ற இடத்தில் மக்களோடு கூடினார். இங்கே தியத்தீரா ஊராளும் இரத்தாம்பரம்

விற்கிறவளுமான லீதியாள் என்பவளும் ஆர்வத்தோடு வந்து உட்கார்ந்து வசனத்தைக் கேட்டாள். இவள் மிக அதிக வருமானத்தைக் கொடுக்கும் இரத்தாம்பரம் தயாரிப்பதில் எவ்வளவுக்கதிகமாய் நேரத்தை பயன்படுத்த முடியுமோ அந்த அளவுக்கு வருமானம் கிடைக்கும். ஆனால், லீதியாளோ தேவ வார்த்தைக்கு முக்கியத்துவம் கொடுத்து, நேரத்தை ஒதுக்கி விருப்பத்தோடே ஊருக்கு வெளியே வந்தாள். கருத்தோடு கவனமாய் கேட்டாள். இருதயங்களை ஆராய்ந்து பார்க்கிற கர்த்தர் அவள் இருதயத்தை திறந்தார். அவளும், அவள் வீட்டாரும் இரட்சிக்கப்பட்டார்கள். தேவனுடைய பிள்ளைகளானார்கள் (யோ 1:12). இரத்தாம்பரம் பணம் தரும்; ஆனால் விருப்பத்தோடே கேட்கும் வசனங்கள் நித்திய வாழ்வை சுதந்தரிக்கச்செய்யும்.

அப் 17:11–ல் பெரோயா பட்டணத்து விசுவாசிகள் பற்றி வேதம் கொடுக்கும் நற்சாட்சியைக் கவனியுங்கள். **அந்தப் பட்டணத்தார் மனோவாஞ்சையாய் வசனத்தை ஏற்றுக் கொண்டு...... வேதவாக்கியங்களைஆராய்ந்துபார்த்ததினால்.....நற்குணசாலிகளா யிருந்தார்கள்,** என்று பார்க்கிறோம். இப்படி பெரோயாப் பட்டணத்தார் நற்குணசாலிகளாய் வாழ்ந்த வாழ்க்கை, அவர்களில் அநேகம் பேரும், கனம் பொருந்திய கிரேக்கரில் அநேக ஸ்திரீகளும், புருஷர்களும் விசுவாசித்தார்கள் (17:12). எவ்வளவு பெரிய இரட்சிப்பு; வெற்றி என்பதை பாருங்கள். வசனத்தை மனோவாஞ்சையாய் விரும்பி கேட்பது நம் வாழ்க்கையையே தேவனுக்குப் பிரியமானதாய் மாற்றும். மற்றவர்களையும் மனமாற்றம் செய்யும். பிரியமானவர்களே! சிந்திப்போம்; செயல்படுவோம்; தேவ நாமம் மகிமைப்படும்.

இப்பொழுது வசனத்தை அசட்டை செய்வது குறித்தும் ஓரிரண்டு வரலாற்றை கவனிப்போம். மாற்கு 10: 17–25 முடிய உள்ள பகுதியைப் பார்ப்போம். இயேசு வழியில் போகையில் ஒரு ஐசுவரியவான் ஓடிவந்து, இயேசுவுக்கு முன்பாக மண்டியிட்டு, **நல்ல போதகரே! நித்திய ஜீவனை சுதந்தரித்துக் கொள்ள என்ன செய்ய வேண்டும்?** என்ற மிகத் தேவையான ஒன்றை இயேசுவிடம் கேட்டான். இவன் சிறுவயது முதலே அநேக கற்பனைகளைக் கைக்கொண்டு நடக்கிறவன்தான். ஆனாலும் நித்திய ஜீவனைப் பெறக் கூடாதபடி அவனிடத்திலிருந்த ஒருகுறையை அவர் சுட்டிக்காட்டினார். ஆனால், அவனுடைய விருப்பம், நோக்கம் எல்லாம் தன் மிகுந்த ஆஸ்தியின் மேலிருந்ததால், இந்த வார்த்தையைக் கேட்டு மனந்திரும்புவதற்குப் பதிலாக மனமடிந்து, துக்கத்தோடே திரும்பிப் போனான். கைக்கு எட்டிய நித்திய ஜீவனை இழந்து போனான். அன்பானவர்களே! இன்றும் அநேகர் வேதத்தை வாசிக்கிறார்கள். ஆன்மீக கூட்டங்களில் மெய்சத்தியத்தை கேட்கிறார்கள். ஆனாலும் உலக உறவுகளுக்கும், சமுதாயப்பெருமைகளுக்கும் முக்கியத்துவம் கொடுத்து வசனத்தை

விசுவாசிக்காமல் நித்திய ஜீவனை இழந்தவர்களாயிருக்கிறார்கள் என்பது வேதனைக்குரியதாக இருக்கிறது. **என் வசனத்தைக் கேட்டு, என்னை அனுப்பினவரை விசுவாசிக்கிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டு** என்ற [யோவான் 5:24] இயேசுவின் வாக்களிப்பை எல்லோரும் சுதந்தரித்துக் கொள்ள ஜெபிப்போம்.

அப் 26:1–32 ல் பவுல் அகிரிப்பா இராஜாவுக்கு முன் நிறுத்தப்படுகிறார். பேசுவதற்கு தனக்குக் கிடைத்த வாய்ப்பை பவுல் பயன்படுத்தி சத்தியத்தை தெளிவாகப் போதித்தார். இதைக் கேட்ட அகிரிப்பா ராஜா, **நான் கிறிஸ்தவனாகிறதற்குக் கொஞ்சங்குறைய நீ என்னை சம்மதிக்கப்பண்ணுகிறாய்** என்று தன் உண்மை நிலையை வெளிப்படுத்துகிறான். இவன் கிறிஸ்தவனாவதற்கு கொஞ்சம் தான் குறைவு. அப்படியென்றால் கிறிஸ்தவனாவதற்கு அதிக வாய்ப்பு பெற்றிருந்தும், உலகம் தரும் அழிந்து போகும் பெருமைக்குரிய வாழ்க்கையால், தேவவார்த்தை கொடுக்கும் நித்தியமான வாழ்க்கையை அகிரிப்பாராஜா இழந்து போனான் என்பது எவ்வளவு வேதனை அளிக்கக் கூடியதாயிருக்கிறது என்பதை சிந்தித்துப் பார்ப்போம். இவனுடைய ராஜா என்ற பெருமை, ராஜாதி ராஜாவுக்கு முன் கீழ்ப்படியாமையினால் இரட்சிப்பை இழக்கச் செய்தது.

அருமையானவர்களே! வேதம் நம் கைகளில் கொடுக்கப்பட்டுள்ளது. வாரத்தின் முதல் நாளில் சபையிலும், இடைப்பட்ட நாட்களிலும், ஆவிக்குரிய விசேஷக் கூட்டங்களின் மூலமாகவும், தேவதாசர்கள் மூலம் வீடு சந்திப்புகளிலும், தனிப்பட்ட முறையில் நேருக்கு நேராகவும் தேவனுடைய வார்த்தைகள் நம்மை சந்தித்துக் கொண்டுதானிருக்கிறது. நம் நிலை என்ன? விருப்பத்தோடே கேட்கிறோமா? உம்முடைய வேதத்தை **நேசிக்கிறவர்களுக்கு** மிகுந்த சமாதானமுண்டு. அவர்களுக்கு இடறல் இல்லை [சங்.119:165]. பெற்று அனுபவிக்க வாழ்த்துகிறேன்.

## சீஷன்

*சிலுவையை சுமக்கிறவனே சீஷன்... லூக்கா: 14:27*

*உலகத்தை வெறுக்கிறவனே சீஷன் .... லூக்கா: 14:33*

*தன் ஜீவனை வெறுக்கிறவனே சீஷன் .... லூக்கா: 14:26*

*கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திருக்கிறவனே சீஷன்.... யோவான்: 8:31*

*கனி கொடுக்கிறவனே சீஷன்... யோவான்: 15:8*

# கண்களைத் திறந்தருளும் கர்த்தாவே!

Bro. பாண்டியன்

**ஆ**ண்டவர் இயேசுவின் நாமத்தில் உங்களுக்குச் சமாதானம் உண்டாவதாக. வேதத்தில் சங்கீதக்காரன் ஜெபிக்கும் ஒரு ஜெபத்தைக் கவனியுங்கள். **உமது வேதத்திலுள்ள அதிசயங்களை நான் பார்க்கும் படிக்கு என் கண்களைத் திறந்தருளும்** (சங் 119:18). இந்த சங்கீதம் முழுவதுமே தேவனுடைய **வேதத்தை** மையப்படுத்தியே எழுதப்பட்டதாகும். இந்த மனுக்குலத்திற்கு தேவன் ஆதியில் இருந்தே அநேக அதிசயங்களை நடத்திக்காட்டியிருக்கிறார். அவைகளை நாம் அறிந்துக் கொள்ளும் போது தேவனிடத்தில் நமக்கு விசுவாசமும், நம்பிக்கையும் அதிகரிப்பது மட்டுமல்ல, போராட்டம் நிறைந்த இவ்வுலக வாழ்வில் நாம் குழப்பமடையாமல் நிம்மதியாக வாழவும் அது உதவி செய்கிறது. ஒரு விஷயத்தைப் படிக்கும் போதோ, கேட்கும்போதோ அது நம் மனக்கண்களுக்கு முன்பாகத் தோன்றுகிறது. அதனால் தான் உமது அதிசயங்களைக் காண என் கண்களைத் திறந்தருளும் என்று இங்கு ஜெபிக்கின்றான். உமது வேதத்தைத் தியானிக்கும்படி குறித்த நேரத்திற்கு முன்னே என் கண்கள் விழித்துக்கொள்ளும் என்று பார்க்கிறோம் (119:148).

முதலாவது, ஆகாரின் மகன் சாராளின் மகனைப் பரிகாசம் பண்ணின போது, சாராள் மனம் வருந்தி தன் குடும்பத்திலிருந்து அவளை வெளியேற்றினாள். பாலைவனமான வனாந்தரத்தில் ஆகார் தன் பிள்ளை குடிதண்ணீர் இல்லாமல் சாகும் சூழ்நிலை ஏற்பட்டபோது, அவள் பிள்ளையை தனியே விட்டு தூரமாகச் சென்று கதறி அழுதாள். ஆனால், கவனியுங்கள் தேவன் ஆகாரின் சத்தத்தை அல்ல மாறாகப் பிள்ளையின் சத்தத்தைக் கேட்டார் என்று வசனத்தில் உள்ளது. அப்போது தேவன் அவளுடையக் கண்களைத் திறந்தார், அங்கே ஒரு தண்ணீர் துரவு கண்டு அவர்கள் தாகம் தீர்க்கப்பட்டது (ஆதி 21:19). ஏற்ற வேளையில் தேவன் கிருபை செய்தார். இன்றைக்கும் அநேகர் உண்மை தெய்வம் யார் என்பதை அறியாமல் தாகத்தோடே அலைந்து திரிகிறார்கள். ஆனால், தேவனுடைய குமாரன் இயேசுவானவர் கொடுக்கும் ஜீவத்தண்ணீர் மாத்திரமே ஒருவருடைய ஆவிக்குரிய தாகத்தைத் தீர்ப்பதாக நாம் யோவான் 4:10ல் காண்கிறோம். மேலும், ஒருவன் தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து பானம் பண்ணக்கடவன்.... அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும் என்றார். இயேசு யோவான் 7:37 அது நாம் ஞானஸ்நானத்தில் பெற்றுக் கொள்ளும் பரிசுத்த ஆவியின் முத்திரையைக் குறிக்கிறது. (எபேசி1:13) ஆகாருக்கு துரவைக்காணக் கண்களைத் திறந்த அதே தேவன் நாமும் இயேசுவின் கிருபையினாலே இரட்சிக்கும்படி செய்திருக்கிறார் (எபே 2:8).

அடுத்து பிலேயாமின் கண்கள் திறக்கப்பட்டதை எண் 22:31 ல் வாசிக்கின்றோம். இவன் தேவனுடைய ஜனங்களை சபிக்கும்படி பண ஆசையால் தூண்டப்பட்டான். ஆனால், தேவன் அவனைத் தடுத்தார். இருந்தாலும் பாலாக் என்கிற ராஜாவின் ஆசை வார்த்தைகளில் மயங்கி, அநீதத்தின் கூலியை விரும்பிச் சென்றான். பேசாத மிருகம் (கழுதை) பேசி தீர்க்கதரிசியின் மதிகேட்டை தடுத்தது என்கிறார் பேதுரு (2பேது 2:15,16) இன்றைக்கும் சிலர் பொருளாசையால் தூண்டப்பட்டு தங்கள் விசுவாசத்தைக் கெடுத்துக் கொள்வதோடு தங்கள் பிள்ளைகளையும் வழிதப்பிப் போக பண்ணுகின்றனர். உலக மனுஷர் பொருள் சேர்ப்பதிலேயே குறியாக இருப்பதால் இன்றைக்கும் அநேகர் கிறிஸ்துவண்டையில் சேராமல் இருக்கிறார்கள். அது தேவனைத் தவிர்த்து பொருளாசை ஒரு எஜமானைப் போல அவர்களை வழிநடத்துகிறது (மத் 6:24). ஆகவே, **பொருளாசையைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள் ஒருவனுக்கு எவ்வளவு திரளான ஆஸ்தி இருந்தாலும் அது அவனுக்கு ஜீவன் அல்ல** என்றார் இயேசு (லூக் 12:15). இந்த விஷயத்தில் நம் அநேகருடைய கண்கள் திறக்கப்படவேண்டும். இதை போதித்த ஆண்டவரை அக்கால மக்கள் கேலி செய்தனர் (லூக்கா 16:14) இப்போதும் வேதம் சொல்லுகிறபடி உங்களுக்கு இருக்கிறவைகள் போதும் என்று எண்ணுங்கள் என எடுத்துச் சொன்னால் சிலர் அலட்சியம் பண்ணுவது வேதனைக்குரியதாகும்.

இறுதியாக தீர்க்கதரிசி எலிசாவின் வேலைக்காரன் எதிரிகளைக் கண்டு பயந்த போது அவனுடைய கண்கள் திறக்கப்பட எலிசா ஜெபித்தார். அப்போது **கேயாசி** என்னப்பட்ட அவனுடைய கண்கள் திறக்கப்பட்டபோது அவர்களைச் சுற்றிலும் அக்கினிமயமான குதிரைகளாலும் இரதங்களாலும் நிறைந்திருக்கிறதைக் கண்டான் (2 ராஜா 6:17). பிரியமானவர்களே தேவனுடைய பிள்ளைகளாகிய நம்மைக்கூட தேவன் இவ்விதமாக, அதிசயமாகத்தான் பாதுகாத்து வருகிறார் என்றால் அது மிகையாகாது. சங் 34:6,7 ல் பார்க்கிறோம். இந்த ஏழை கூப்பிட்டான், கர்த்தர் கேட்டு அவன் இடுக்கண்களுக்கு எல்லாம் நீங்கலாக்கி இரட்சித்தார் என்றும், கர்த்தருடைய தூதன் அவருக்குப் பயந்தவர்களைச் சூழப் பாளையமிறங்கி விடுவிக்கிறார் என்றும் கூறப்பட்டுள்ளது. ஆகவே, நாம் தேவனுக்குப் பயப்படுகிறவர்களாய் இருந்து அவரை நோக்கி ஜெபிக்கும் போது சகல வித பாதுகாப்பையும், எல்லாப் புத்திக்கும் மேலான சமாதானத்தையும் தருகிறார் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

பழைய ஏற்பாடு நமக்குப் போதனையாக உள்ளது. புதிய ஏற்பாட்டில் பவுல் கூறுவதைக் கவனியுங்கள் ‘தேவன் நம்மிடத்தில் காண்பிக்கும் அவருடைய வல்லமையின் மகத்துவம் இன்னதென்று நீங்கள்

அறியும்படிக்கு, அவர் உங்களுக்குப் பிரகாசமுள்ள மனக்கண்களைக் கொடுக்க வேண்டுமென்றும் வேண்டிக் கொள்கிறேன் (எபே 1:19). ஆம் வேதத்திலுள்ள அதிசயங்களைக் காணும்படி நம் மனக்கண்கள் பிரகாசமடைய வேண்டும். ஏனெனில், நாம் பழைய ஏற்பாட்டில் அல்லது ஆண்டவர் இயேசு காலத்தில் ஜனங்கள் அற்புதங்களைக் கண்டதுபோல நாம் நேரடியாகப் பார்க்கவில்லை. ஆனால், நாம் தரிசித்து நடவாமல் விசுவாசித்து நடக்கிறவர்கள் (2 கொரி 5:6). நம் தேவன் ஆராய்ந்து முடியாத பெரிய காரியங்களையும், எண்ணி முடியாத அதிசயங்களையும் செய்கிறவர். அவைகளைக் காணும்படி நம் மனக்கண்கள் பிரகாசமாகும் போது நம் விசுவாச வாழ்க்கை உற்சாகமாகும். நம் பிரச்சனைகள் தேவனுடைய வல்லமைக்கு முன் சிறியதாக மாறும்.. நாம் தாவீதைப் போல தைரியமாக கோலியாத் போன்ற போராட்டங்களைச் சந்தித்து வெற்றிக்கொள்ளலாம் தேவக்கிருபையும், சமாதானமும் உங்கள் அனைவரோடுங் கூட இருப்பதாக. ஆமென்.

†

## *யாரை பகைக்கக் கூடாது?*

1) **கர்த்தரை - நியாதி** 5:31

2) **நீதிமானை - சங்** 34:12

3) **நல்லோரை** - 2 **தீமோ** 3:3

4) **சகோதரனை/சகோதரியை - லேவி** 19:17

5) **தரித்திரனை - நீதி** 14:20

6) **உத்தமனை - நீதி** 29:10

7) **கடிந்து கொள்கிறவனை - ஆமோஸ்** 5:10

8) **ஒருவரை ஒருவர் - தீத்து** 3:3

# எபிரெயர் 1 ஆம் அதிகாரம்
# பிரசங்க குறிப்பு – 1

**Bro. V. ஆசீர்வாதம்**, சென்னை.

**இயேசுவானவர் எவ்வளவு பெரியவராயிருக்கிறார் :**

முந்தைய நாட்களில் தேவன் தமது வார்த்தையை தீர்க்கதரிசிகள் மூலமாய் வெளிப்படுத்தினார் (எபி 1:1). தேவதூதர்கள் மூலமாய் தமது வார்த்தையை வெளிப்படுத்தினார் (எபி 2:2:). ஆனால், இந்த கடைசி நாட்களில் அதாவது இறுதியாக இதற்குப் பின்பு இன்னொரு வெளிப்பாடு இல்லாத நிலையில் குமாரன் மூலமாய், கடைசி முறையாக தமது சித்தத்தை வெளிப்படுத்தினார்.

1. **குமாரன் மூலமாய்த் திருவுளம் பற்றினார்.**

a. சங் 2:7, எபி 1:5 இயேசுவானவர் தேவனால் நேரடியாக குமாரனாக அழைக்கப்பட்டார். நீர் என்னுடைய குமாரன் என்றும், நான் அவருக்குப் பிதாவாயிருப்பேன் என்றும், தேவன் எந்த தூதனையும் பார்த்து அப்படி சொல்லாமல், இயேசுவை நோக்கியே குமாரன் என்று சொன்னார். இது கிறிஸ்து பிறப்பதற்கு, ஏறக்குறைய 1000 ஆண்டுகளுக்கு முன்பாகவே தாவீதின் வாயிலாக வெளிப்படுத்தப்பட்டது.

- கொலோ 2: 2 பிதாவுக்கும், கிறிஸ்துவுக்குமுள்ள இரகசியத்தை அறிய வேண்டும்.
- எபி 1:3 இயேசு, பிதாவின் மகிமையின் பிரகாசமாயிருக்கிறார்.
- பிலி 2:6 இயேசு, தேவனுடைய ரூபமாயிருக்கிறார்.
- II கொரி 4:4 இயேசு, தேவனுடைய சாயலாயிருக்கிறார்.
- கொலோ 1:15 இயேசு, தேவனுடைய தற்சுரூபமாயிருக்கிறார்.

b. ஏசா 9:6 நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார் அதாவது இயேசுவானவர் குமாரனாக முன்னறிவிக்கப்பட்டார்.

c. I யோவான் 4:14 தேவன் இயேசுவை குமாரனாகவே உலகத்துக்கு அனுப்பினார்.

d. ரோமர் 8:32 தேவன் இயேசுவை குமாரனாகவே சிலுவைக்கு ஒப்புக்கொடுத்தார்.

e. ரோமர் 1:5 தேவன் இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினதினாலே இயேசுவானவர் பலமாய் ரூபிக்கப்பட்ட தேவகுமாரனாக இருக்கிறார்.

f. எபி 4:14, இயேசுவானவர் குமாரனாகவே பரலோகத்துக்கு போனார்.

g. யோவான் 1:14, 3:16 இயேசுவானவர் ஒரே பேரான குமாரனாக இருக்கிறார்.

h. கொலோ 1:18, மரித்தோரிலிருந்து முதல் முதல் எழுந்தவரான முதற்பேரான குமாரனாக இருக்கிறார்.

I ரோமர் 8:29, இயேசுவானவர் அநேக சகோதரருக்குள்ளே முதற்பேரானவராயிருக்கிறார்.

j. எபி 7:28 இயேசுவானவர் என்றென்றைக்கும் பூரணரான குமாரனாக இருக்கிறார்.

k. தேவன் குமாரன் மூலமாய் திருவுளம் பற்றின எல்லாம் நித்தியமாயிருக்கிறது.

l. மத் 26:28, எபி 13:20, குமாரன் மூலமாய் நித்திய உடன்படிக்கையை அதாவது புதிய உடன்படிக்கையை ஏற்படுத்தினார்.

m. எபி 5:9 குமாரன் மூலமாய் நித்திய இரட்சிப்பு உண்டாயிருக்கிறது.

n. எபி 9:15 குமாரன் மூலமாய் நித்திய சுதந்திரத்தை கொடுக்கிறார்.

o. எபி 9:12 நித்திய மீட்பை உண்டுபண்ணினார்.

p. எபி 9:12 இயேசுவானவர் நித்திய பிரதான ஆசாரிய ஊழியத்தை உடையவராயிருக்கிறார்.

## II. தேவன் இயேசுவை சர்வத்துக்கும் சுதந்தரவாளியாக ஏற்படுத்தினார்:

இயேசுவானவர் எல்லாவற்றிற்கும் வாரிசு உரிமை உள்ளவராய் இருக்கிறார். ஏனென்றால், பிதாவானவர் எல்லாவற்றையும் இயேசுவின் கையில் ஒப்புவித்திருக்கிறார்.

a. மத் 11:27 சகலமும் என் பிதாவினால் எனக்கு ஒப்புவிக்கப்பட்டது என்று இயேசுவானவர் கூறினார்.

b. யோவான் 13:3 தம்முடைய கையில் பிதா எல்லாவற்றையும் ஒப்புக்கொடுத்தார் என்பதை இயேசுவானவர் அறிந்திருந்தார்.

c. யோவான் 3:35 பிதாவானவர் குமாரன் கையில் எல்லாவற்றையும் ஒப்புக்கொடுத்தார் என்று யோவான் ஸ்நானகன் சாட்சிக்கொடுத்தான்.

d. எபே 1:22 எல்லாவற்றையும் அவருடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தினார்.

e. I கொரி 15:27-28 தேவன் சகலத்தையும் இயேசுவுக்கு கீழ்ப்படுத்தினார். கீழ்ப்படுத்தப்பட்ட சகலமும், குமாரனும், தேவனுக்குக் கீழ்ப்பட்டிருப்பார்கள்.

f. அப் 4:12 தேவன் இரட்சிப்பை இயேசுவானவரிடத்தில் ஒப்புக்கொடுத்தார்.

g. எபி 2:10 இயேசுவானவர் இரட்சிப்பின் அதிபதியாயிருக்கிறார்.

h. யோவான் 5:22 நியாயத்தீர்ப்பு இயேசுவிடம் ஒப்புவிக்கப்பட்டது.

I யோவான் 17:2 நித்திய ஜீவனைக் கொடுக்கும் பொறுப்பு இயேசுவினுடையது.

j. மத் 28:18 வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரங்களும் இயேசுவுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது.

III. **இயேசுவானவர் சிருஷ்டிகராயிருக்கிறார்:**

a. எபே 3:11 தேவன் இயேசுகிறிஸ்துவைக் கொண்டு எல்லாவற்றையும் சிருஷ்டித்தார்.

b. யோவான் 1:3 இயேசு கிறிஸ்துவின் மூலமாய் எல்லாம் உண்டாயின.

c. கொலோ 1:16 பரலோகத்தில் உள்ளவைகள், பூலோகத்தில் உள்ளவைகள் யாவும் அவரைக்கொண்டும் அவருக்கென்று சிருஷ்டிக்கப்பட்டது.

d. எபி 1:10 பூமியை அஸ்திபாரப்படுத்தினார். வானங்கள் அவருடைய கரத்தின் கிரியையாயிருக்கிறது (சங் 102:25-27).

சிருஷ்டிக்கப்பட்டவைகள் அழிந்துபோம் சிருஷ்டிகரோ நிலைத்திருக்கிறார். ஆனால், மனிதன் வீட்டைக் கட்டுகிறான். அல்லது ஏதோ ஒன்றை உருவாக்குகிறான். அவைகள் நிலைத்திருக்கின்றன. மனிதனோ மறைந்து விடுகிறான். ஆனால், இங்கே சிருஷ்டிகர் நிலைத்திருக்கிறார். சிருஷ்டிக்கப்பட்டவைகள் மறைந்து போகின்றன.

e. I கொரி 8:6 இயேசு கிறிஸ்து மூலமாய் சகலமும் உண்டாயிருக்கிறது.

IV. **பிதாவுக்கும், இயேசுவுக்கும் உரிய உறவு:**

a. கொலோ 2:2 பிதாவுக்கும், கிறிஸ்துவுக்குமுள்ள இரகசியத்தை அறிய வேண்டும்.

b. எபி 1:3 இயேசு, பிதாவின் மகிமையின் பிரகாசமாயிருக்கிறார்.

c. பிலிப் 2:6 இயேசு, தேவனுடைய ரூபமாயிருக்கிறார்.

d. II கொரி 4:4 இயேசு, தேவனுடைய சாயலாயிருக்கிறார்.

e. கொலோ 1:15 இயேசு, தேவனுடைய தற்சுரூபமாயிருக்கிறார். அதாவது, இயேசுவானவர் தேவனுடைய குணாதிசயங்களையும் அவருடைய தன்மையையும் பிரதிபலிக்கிறவராயிருக்கிறார்.

f. யோவான் 1:18 பிதாவை வெளிப்படுத்துகிறவராயிருக்கிறார்.

g. I யோவான் 5:20 தேவனை அறிந்துக்கொள்ளும் புத்தியை நமக்கு கொடுத்திருக்கிறார்.

h. யோவான் 4:24 தேவனை தொழுதுகொள்ளும்படி கற்பித்திருக்கிறார்.

I யோவான் 6:38 தாம் தேவனுடைய சித்தத்தின்படி செய்ய உலகத்திற்கு வந்ததாக அறிவித்தார்.

j. யோவான் 8:29 பிதாவுக்கு பிரியமானதை எப்போதும் செய்கிறார்.

k. யோவான் 12:49 தேவன் கட்டளையிட்டவைகளை மாத்திரம் பேசினார். தம்முடைய சுயமாய் எதையும் பேசவில்லை.

l. யோவான் 8:40 தேவனிடத்தில் கேட்டவைகளை அறிவித்தார்.

m. யோவான் 7:18 தம்முடைய மகிமையைத் தேடாமல், தன்னை அனுப்பின தேவனுடைய மகிமையைத் தேடினார்.

V. **எல்லாம் இயேசுவுக்குள் நிலைநிற்கிறது:**

**இயேசுவானவர் சர்வத்தையும் தமது வல்லமையுள்ள வசனத்தினாலே தாங்குகிறார்:**

a. எபி 1:10 பூமியை அஸ்திபாரப்படுத்தினார்.

b. கொலோ 1:17 எல்லாம் அவருக்குள் நிலைநிற்கிறது.

c. இயேசுவானவர் சிருஷ்டிகர் மாத்திரமல்ல, தாம் சிருஷ்டித்த யாவும் நிலைத்திருக்கப் பண்ணுகிறவருமாயிருக்கிறார். அதாவது, இயேசுவானவர் தேவனிடத்தில் பரிந்து பேசுகிறவராய் இருக்கிறபடியால், உலகத்தை தேவன் முடிவுக்குக் கொண்டு வராதிருக்கிறார் (1 யோவா 2:1). நோவா காலத்தைப்போல இடையில் ஒரு முடிவைக் கொண்டு வராமல், தேவன் முன்குறித்த நாள் வரைக்கும் உலகத்தை நிலைநிற்கச் செய்வது இயேசுவானவருடைய பரிந்துரையாகும்.

– தொடரும்...


# வேதாகமம்– தேவனின் பரிபூரண புத்தகம்

தமிழில். Bro. D. சாமுவேல் ராஜ், சத்தி


**சென்ற மாத இதழின் தொடர்ச்சி...**

உபாகமம் 23ம் அதிகாரம் 12ம் வசனத்தில், ஒருவன் வெளிக்குப்போயிருக்கும் இடம் பாளையத்திற்குப் புறம்பேயிருக்க வேண்டுமென்றும், வசனம் 13ல், ஒருவன் மல ஜலாதிக்குப் போகையில் மண்ணைத் தோண்டி மல ஜலாதிக்கிருந்து அவனிலிருந்து கழிந்து போனதை மூடிப்போட வேண்டுமென்றும் அவர்களுக்குக் கூறப்பட்டது. அதற்குக் காரணம் தெளிவானது. ஏனென்றால், அவ்வாறு செய்யாவிடில் நோய் பரவும் அபாயம் உண்டு. அந்த இருண்ட காலத்தில் ஐரோப்பா கண்டத்திலே, இந்தப் பழக்கத்தை கடைபிடிக்காத காரணத்தால், பல வியாதிகள் மக்களிடமிருந்தன.

இஸ்ரவேலர்களுக்கு கற்றுக் கொடுப்பதில் காணும் தேவனுடைய ஞானத்திற்கு மீண்டும் ஒரு உதாரணத்தை லேவியராகமம் 11ம் அதிகாரம் காட்டுகிறது. இஸ்ரவேலர்கள் சில பொருட்களை புசிக்கலாம் என்றும், சில பொருட்களை புசிக்கலாகாது என்றும் பணிக்கப்பட்டிருந்தனர். மாட்டுக்கறி, ஆடு, மீன், பறவைகள், மற்றும் எல்லா வித காய்கறிகள், சகலவித விதைகளையும் சாப்பிடலாம் என்றும் முயல், பன்றி, செத்துப்போன மிருகங்களைத் தின்னும் கழுகு போன்றவற்றை சாப்பிடக் கூடாது என்றும் கூறப்பட்டிருந்தது. இந்த உணவுகள் இஸ்ரவேலருக்கு ஏன் தடை செய்யப்பட்டிருந்தன என்று தெரியுமா? எந்த ஒரு பிணந்தின்னியும், தான் தின்ற மிருகத்தின் வியாதியையும் பற்றிக்கொள்ளுகிறது என்பதைப் புரிந்து கொள்வது மிக எளிது. கழுகுகளைச் சாப்பிடுவது மிகவும் அறிவற்ற ஒரு செயல். ஏனெனில் அதை சாப்பிட்டவன் அதற்கிருந்த வியாதியையும் அடையும் சந்தர்ப்பம் உண்டு.



ஆம்



இல்லை

ஒழுங்காக சமைக்காத பன்றி இறைச்சி மிகவும் ஆபத்தானது என்பதையும் நாம் அனைவரும் அறிவோம். குடற் புழுக்களால் ஏற்படும் கொடிய நோயும் மற்றும் பிற விதமான நோய்களும் வேறு இறச்சியை விட பன்றி இறைச்சியால் வெகு எளிதில் பற்றிக் கொள்கிறது. தேவன் இதை அறிவார். எனவே, இவ்வகை உணவுகளை உண்ணலாகாது என இஸ்ரவேலருக்குக் கூறினார். இஸ்ரவேலர்களுக்குப் புசிக்க பலவகை உணவுகள் அளிக்கப்பட்டிருந்ததைப் போல, பல வகை உணவுகள் தடுக்கப்பட்டும் இருந்தன. இந்தக் கட்டளைகளில் எந்த ஒரு தவறும் நடக்கவில்லை.

வேதாகமப் புத்தகத்தின் பக்கங்களிலே நாம் காணக்கூடிய தேவனுடைய ஞானத்திலிருந்து மருத்துவத்துறையைப் பற்றி மட்டுமே சுருக்கமாக நாம் கண்டோம். இதே வகையான ஞானத்தை வான சாஸ்திரம், பூமியின் அமைப்பியல், மனோதத்துவம், சரித்திரம், பூகோளம் இன்னும் நாம் பரிசோதிக்கக் கூடிய எந்த ஒரு விஞ்ஞானத் துறையிலும் காண முடியும். நிச்சயமாக, வேதாகமம் தேவனால் ஏவப்பட்டு எழுதப்படாமல், மனிதர்களால் எழுதப்பட்டிருந்தால், இதுபோன்ற உண்மைகளை அறிந்திருக்க முடியாது.

விஞ்ஞான ரீதியாக வேதாகமம் சரியானது. ஏனெனில், அது தேவனுடைய வார்த்தை. அவர் வார்த்தையை நாம் பின்பற்றாவிட்டால், நோய் போன்ற பிரச்சனைகள் சந்திப்பதை நாம் தவிர்க்க முடியாது. விஞ்ஞானக் கருத்துப்படி நாம் எவ்வாறு வாழ வேண்டுமென தேவன் நமக்குக் கூற முடியுமானால், நாம் ஆவிக்குரிய விதத்தில் வாழ்ந்து நித்திய ஜீவனை அடைவது எப்படி என்றும் நமக்குக் கூற நிச்சயமாக அவர் ஞானமுள்ளவராக இருக்கிறார். நீங்கள் தேவனை விசுவாசிக்கிறீர்களா? வேதாகமம் தேவனுடைய வார்த்தை என்பதை நம்புகிறீர்களா? நீங்கள் தேவனுடைய பிள்ளையாக மாறவும், நீங்கள் வாழும் வரை அவருடைய வழியில் வாழவும், நீங்கள் உங்கள் மனதில் தீர்மானித்து விட்டீர்களா? †

# பாவத்தின் வேர்


Bonnie Rushmore


எல்லாப் பாவங்களுக்கும் மூல காரணம், வேர் நம் விருப்பங்களையும், ஆசைகளையும் மற்றவர்களுடைய விருப்பங்களுக்கு மேலாக வைப்பதுதான் என்று சொல்ல முடியுமா? பாவம் என்பது ஒரு வேதாகம பாடமாக இருக்கிறபடியால் இக்கேள்விக்கு தேவனால் அங்கீகரிக்கப்பட்ட பதிலைக் காண வேதாகமத்திலிருந்து சில வசனப்பகுதிகளை கவனிப்போம்.

முதலாவது, பாவத்திற்கான விளக்கத்தை பார்ப்போம். நியாயப்பிரமாணத்தை மீறுகிறதே பாவம் (I யோவான் 3:4). தேவனுடைய பிரமாணங்களில் எல்லாவற்றையும் அல்லது ஏதாவது ஒன்றை செய்யத் தவறும்போது நாம் பாவம் செய்கிறோம். ஒருவரால் தன் சிந்தையில் பாவஞ்செய்ய முடியும் (மத் 5:22,28; I யோவான் 3:15) செயலால் பாவஞ்செய்ய முடியும் (ரோமர் 2:32), வார்த்தைகளால் பாவஞ்செய்ய முடியும் (கொலோசெயர் 3: 8 –9). நம் வாழ்க்கையின் எல்லா பாவங்களும் இந்த மூன்று வகைகளில் அடங்கிவிடுகிறது. எனவேதான் அப்போஸ்தலனாகிய யோவான் நூலில் மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையுமாகிய உலகத்திலுள்ளவைகளெல்லாம் பிதாவினாலுண்டானவைகளல்ல, அவைகள் உலகத்திலுண்டானவைகள் என்று எழுதுகிறார் (I யோவான் 2:16). பாவம் என்பது உலகத்தால் உண்டாக்கப்பட்ட ஒன்று. அதை பரமப் பிதாவோடு எவ்விதத்திலும் சம்மந்தபடுத்த முடியாது.

பல புதிய ஏற்பாடு வசனப்பகுதிகள் பாவம் என்றால் என்ன என்பதை பட்டியலிட்டுக் காட்டுகின்றன. இவ்வசனங்கள் தேவனால் ஏற்றுக் கொள்ளப்பட முடியாத மனித நடக்கைகளின் வகைகளை சுட்டிக்காட்டுகின்றன (ரோமர் 1:29–32; I கொரிந்தியர் 5:11; கலாத்தியர் 5:19–21; கலாத்தியர் 5:19–21; தீமோத்தேயு 3:2–4) வெளிபடுத்தின விசேஷம் 21:8).


## 12 வித்தியாசமான தலைப்புகளில் கைப்பிரதிகள் கிடைக்கும். தேவைக்கு எங்களைத் தொடர்பு கொள்ளவும்.



















## World Evangelism Gospel Media

Rajanayagam & Benny Martin On Nambikkai TV
Every Tuesday 6.30 - 7:00 am

Rajanayagam & Benny Martin On Nambikkai TV
Every Friday 7.30 - 8.00 am

Arjunan on Nambikkai TV
TV : On Monday & Saturday 7.30 - 7.45 pm

Hindi TV Program : Sunny, Francis & Vinay David Speaking
Sunday & Tuesday ( 7:00 - 7:30 ) pm on
Shubhasandesh Hindi Channel

P.K. Varghese In Malayalam :
Every Saturday 6:00 - 6:30 am on Jai Hind Channel TV

Philemon & Kingsley on Tamilan TV and Nambikai TV :
Every Sunday 6:45 - 7:00 am
Every Friday 6.00 - 6.30 am
Joy TV - Saturdays 9.00 pm Salvation TV - Every Sunday 2.00 pm

Joshua & Ricky Gootam In Telugu:
Every Saturday at 6:00 pm Subhavartha Channel
Every Wednesday at 6:30 pm on Rakshana Channel
Every Thursday at 11:00 am on Rakshana Channel
Satyavani T.V. online : www.sakthitv.in
Every Wednesday & Friday at 8.00 pm

For English Voice of Truth
Contact - Brothers Philemon or Kingsley
@ Po box 15 , 45/c1 Church Lane, Coronation Street,
Arasaradi, Madurai - 625016
9244204420 / 21, 0452 - 2607026



**"Registered" with RNI No: TNTAM/2006/20466**
Postal regn. No. Erode/26/2024 - 2026
**Licensed to Post without pre payment**
**No: TN / WR / ERD / 03 / WPP / 2024 - 2026**
Published on 17/18 th of Every Month
Posted at Erode HPO on 20/21 of Every Month.

## எங்களது இதர வெளியீடுகள்


**சத்தியத்தின் குரல்**
என்ற நூல் வேண்டுவோர்
எங்களைத் தொடர்பு கொள்ளவும்.
- ஆசிரியர்


**தபால் செலவிற்கு பணம் அனுப்பி**
**இந்நூல்களைப் பெற்றுக் கொள்ளலாம்.**





















## வேதாகம அஞ்சல் வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம்

- Advanced Bible Correspondence Course -

பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்க விரும்புபவர்களுக்கு இது ஓர் அரிய வாய்ப்பு.

ஆம், வேதாகமமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு 7 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட 100 பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.

விருப்பமுள்ளவர்கள்
மணியார்டர் அனுப்பி பதிவு செய்து கொள்ளவும்.

இயக்குனர்
**அஞ்சல் வழி வேதாகமக் கல்வி**
த.பெ.எண் 27, காங்கேயம் 638-701. தமிழ்நாடு, இந்தியா.

**To:**

### திருமறை தியானம்

**நம்பிக்கை TV**
செவ்வாய் - காலை 6:30 - 7:00 மணி
**நம்பிக்கை TV**
வெள்ளி - காலை 7:30 - 8:00 மணி

Printed by : K.C. Senthilkumar, at Sun Offset Printers, 50 Kovai Road, Kangayam - 638 701.
Editor. S. Rajanayagam.